## பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 242

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பத்தாவது பாராளுமன்றம்

(முதலாவது கூட்டத்தொடர்)

# அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கை

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ (வைத்தியர்) நிஷாந்த சமரவீர அவர்களால் 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது

*இலங்கைப் பாராளுமன்றத்தால் 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி அச்சிடப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டது.*

**அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு**

**பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்**

1. கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர, பா.உ., (தவிசாளர்)
2. கௌரவ மனோ கணேசன், பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
3. கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர, பா.உ., (2025.05.20 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
4. கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
5. கௌரவ டி.வீ. சானக, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
6. கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
7. கௌரவ நலீன் பண்டார ஜயமஹ, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
8. கௌரவ எஸ்.எம். மரிக்கார், பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
9. கௌரவ முஜிபுர் ரஹுமான், பா.உ., (2025.05.20ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
10. கௌரவ சமிந்த விஜேசிறி, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
11. கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா, பா.உ., (2025.05.08 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
12. கௌரவ எம்.கே. எம். அஸ்லம், பா.உ.,

13. கௌரவ அர்கம் இல்யாஸ், பா.உ., (2025.05.08 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
14. கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
15. கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ, பா.உ.,
16. கௌரவ திலித் ஜயவீர, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
17. கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், பா.உ., (2025.05.08 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
18. கௌரவ சுஜீவ திசாநாயக்க, பா.உ.,
19. கௌரவ சுதத் பலகல்ல, பா.உ.,
20. கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா, பா.உ.,
21. கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
22. கௌரவ ஜகத் மனுவர்ண, பா.உ.,
23. கௌரவ ருவன் மாபலகம, பா.உ.,
24. கௌரவ சுனில் றாஜபக்ஷ, பா.உ.,
25. கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ, பா.உ.,
26. கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான, பா.உ.,
27. கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம், பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
28. கௌரவ திலிண சமரகோன், பா.உ.,
29. கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி, பா.உ.,
30. கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர, பா.உ.,
31. கௌரவ தினேஷ் ஹேமந்த, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)

**குழு அலுவலகத்தின் பணியாட்தொகுதி**

| | |
|---|---|
| உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) | செல்வி. ஹிமாலி சமரதிவாகர |
| பிரதான அலுவலர் | திருமதி. எச்.ஆர்.த சொய்சா |
| பிரதிப் பிரதான அலுவலர் | திரு.எஸ்.எல்.விக்கிரம |
| பாராளுமன்ற அலுவலர் | திருமதி. ஜீ.வி.எஸ்.கே.குமாரி |
| பாராளுமன்ற அலுவலர் | திருமதி. ஐ.எஸ்.கோமஸ் |
| பாராளுமன்ற அலுவலர் | திருமதி. ஜீ.எல்.டி. பெர்னாந்து |

**குழு அறிக்கைகள்**

அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கைகளை www.parliament.lk என்ற இணையத்தளத்திலிருந்து கீழ்க் காணும் படிமுறை ஊடாக தரவிறக்கம் செய்ய முடியும் .

www.parliament.lk

↓

தமிழ்

↓

பாராளுமன்ற அலுவல்கள்

↓

குழுக்கள்

↓

குழு அறிக்கைகள்

*பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் 242*

**பொருளடக்கம்**


| | |
|---|---|
| தவிசாளரின் குறிப்பு | V |
| நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் | 03-04 |
| அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிறுவனம் | |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை | 05-67 |

## <u>தவிசாளரின் குறிப்பு</u>

இலங்கையின் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு 2025 மே மாதம் 15ஆந் திகதி சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை சம்பந்தமாக விசாரணையை மேற்கொண்டது. அதன்போது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை அறிக்கைகள் பற்றி ஆராயப்பட்டதுடன், நிறுவனத்தின் தொழிற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட நிதி நிலைமை, வர்த்தக மற்றும் தொழிற்பாட்டு அறிக்கைகள், உள்ளக கட்டுப்பாட்டு வழிமுறைகள் அத்துடன் வருமானம் மற்றும் செலவின திட்டமிடல்கள் அடங்கலாக வைத்தியசாலைச் சபையின் நிருவாக ரீதியானதும், சட்ட ரீதியானதுமான பொறுப்புகள் பற்றி விரிவாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை இத்தால் முன்னிலைப்படுத்துகின்றேன்.

“2030 ஆம் ஆண்டளவில் தென் ஆசிய பிராந்தியத்தில் சிறந்த சுகாதார சேவைகள் வழங்குனர்களில் முன்னுரிமையாளராக மாறுதல்” எனும் தொலைநோக்கினைக் கொண்ட இந்த வைத்தியசாலைச் சபையின் பணிக்கூற்று பொது மக்களின் சுகாதாரத்தை மேம்படச் செய்து உயர் தரத்திலான சலுகை மற்றும் முழுமையான சுகாதார சேவையை வழங்குவதாகும். இது 1983ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரி சபைச் சட்டத்தின் கீழ் 1983 டிசம்பர் 23ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை எனும் பெயரில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து பணமாக அல்லது பொருளாக கிடைக்கின்ற கொடைகள், அன்பளிப்புகள் அல்லது நன்கொடைகளினூடாக சபையின் இலக்குகளை அடைந்துகொள்ளும் இந்த நிறுவனமானது, சட்டத்தின் 3(அ) பிரிவின் பிரகாரம் அமைச்சரினால் நியமிக்கப்படும் 08 அங்கத்தவர்களையும் பதவி வழியில் நியமிக்கப்படும் 03 அங்கத்தவர்களையும் கொண்ட சபையினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

மக்களால் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள மக்களுடைய இறையாண்மை அதிகாரத்தை பிரயோகிக்குமுகமாக, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் குழு என்ற வகையில் நான் உட்பட 31 குழு அங்கத்தவர்களால் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை தனது இலக்குகளை எவ்வளவுக்கு அடைந்திருக்கிறது என்பது பற்றிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

வைத்தியசாலைச் சபை நிறுவப்பட்டபோது அடைய எதிரப்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் அதன் செயற்பாடு பற்றி கவனம் செலுத்தப்பட்டதோடு, தொழிற்பாட்டு நடவடிக்கையின்போது இடம்பெற்ற தவிர்வுகள் குறித்த நீண்ட விசாரணையின் பின்னர், நாம் ஒரு என்றவகையில் பொருத்தமான விதப்புரைகளையும் வழங்கி உள்ளோம்.

இந்தப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக, கௌரவ சபாநாயகர் உட்பட பாராளுமன்றத்தின் பணியாட்டொகுதி மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு ஆலோசகரின் ஒத்துழைப்பையும் திறைசேரி அலுவலர் அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி உட்பட கணக்காய்வு அலுவலகத்திடமிருந்து கிடைக்கின்ற ஒத்துழைப்பையும் வியந்து பாராட்டுகின்றேன்.

**வைத்தியர் நிஷாந்த சமரவீர**
**தவிசாளர்,**
**அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு.**

# பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கை

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின் மூன்றாவது அறிக்கையை அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் குழு மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றது.

பகிரங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் முற்றாக அல்லது பகுதியளவில் அரசாங்கத்தினால் நிதி வழங்கப்படுகின்ற நிறுவனங்களின் கணக்குகள் மற்றும் எழுதப்பட்ட சட்டத்தின் ஊடாக அரசாங்கம் வசப்படுத்தப்பட்ட ஏதேனும் தொழில் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் சம்பந்தமாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஒத்துழைப்புடன் ஆராய்தல் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பணியாகும்.

தற்போது, அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கண்காணிப்பின் கீழ் வருகின்றதும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் திணைக்களம் மற்றும் வரவு செலவுத் திட்ட திணைக்களம் ஆகியவற்றின் கீழ் ஒழுங்குப்படுத்தப்படுகின்றதுமான 457 அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் காணப்படுகின்றன. (மூலம்: அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்)

*பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் 242*

அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு அத்தகைய பொறுப்புமுயற்சிகளில், 2025.05.15ஆந் திகதி சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் விடயப்பரப்பிற்குரிய ஶ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையும் சபையின் தற்போதைய செயலாற்றுகையை ஆராய்ந்து வெளியிடப்பட்ட குழுவின் அவதானிப்புக்கள் மற்றும் விதப்புரைகள் ஆகியன இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**<u>நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்</u>**

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையினால் 2023 ,2022 2024 மற்றும்ஆம் ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| **நிறுவனம்** | **கணக்காய்வு அபிப்பிராயம்** | | |
|---|---|---|---|
| | **2022** | **2023** | **2024** |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

**<u>கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகைகள்</u>**

**01 <u>முனைப்பழியற்ற அபிப்பிராயம்</u> (Unqualified Opinion)**

நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் நிதி நிலைமையை நியாயமாக முன்வைக்கின்றன.

**02 <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயம்</u> (Qualified Opinion)**

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றது.

## 03 <u>அபிப்பிராயம் மறுப்பு</u> (Disclaimer of Opinion)

போதுமான அல்லது பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை இணங்காண முடியாத காரணத்தினால் கணக்குகள் குறித்து ஒரு கருத்தை வெளிப்படுத்த முடியவில்லை.

## 04 <u>பாதகமான அபிப்பிராயம்</u> (Adverse Opinion)

நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை.

## <u>ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை</u>
## <u>(சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு)</u>
## <u>விசாரணை மேற்கொண்ட திகதி - 2025.05.15</u>

**<u>கலந்துரையாடப்பட்ட விடயங்கள்</u>**

**01. <u>தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று</u>**

1983ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரி சபைச் சட்டத்தின்படி தாபிக்கப்பட்டுள்ள ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் தொலை நோக்கு “2030ஆம் ஆண்டளவில் பிராந்தியத்தில் சிறந்த சகாதார சேவைகள் வழங்குனர்களில் முன்னுரிமையாளராக மாறுதல்” என்பதையும், “திருப்திகொண்ட பணியாட்டொகுதியுடன் மிகச்சிறந்த நவீன சிகிச்சை முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி அவர்களது துயரங்களையும் அசௌகரியங்களையும் போக்கி உயர் தரம், சலுகை விலை மற்றும் முழுமையான சுகாதார சேவையை வழங்குதல்” அதன் பணிக்கூற்று என்பதையும் குழு அவதானித்தது.

அரச மற்றும் தனியார் வைத்தியசாலை முறைமையின் இடையீட்டு வகிபாகத்தைக் கொண்டுள்ள இந்த நிறுனத்தின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்றுக்கு ஏற்றவாறு இந்நிறுவனம் செயற்படத் தவறியமையால், எதிர்வரும் காலத்தில் அது தொடர்பான முழுமையான கலந்தாய்வு ஒன்றை நடாத்துவது பொருத்தமானது என குழு வலியுறுத்தியது.

**குழுவின் விதப்புரைகள்**

I. அந்த நிறுவனத்தை அதன் தொலைநோக்கின் வழியில் சரியான முறையில் நிலைநிறுத்துதல்.

II. வணிக மாதிரியினுள் தரமான சேவைகளை சலுகை விலையில் வழங்கும், பிற தனியார் வைத்தியசாலைகளுக்கு விலை நிர்ணயம் செய்ய வழிக்காட்டுகின்றதும் இலாபம் ஈட்டுகின்ற வினைத்திறனான அரசாங்க நிறுவனமாக செயல்படும் பொது வைத்தியசாலை ஒன்றை உருவாக்குதல்

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள்/ நிறுவனங்கள்**

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

தலைவர் – ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை

**குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுவதிலுள்ள முன்னேற்றம்**

விதப்புரைகளை நடைமுறை படுத்தியதிலுள்ள முன்னேற்றம் குறித்து 2025.06.30ஆம் திகதி வரை குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை.

## 02. கூட்டுத் திட்டம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபைக்கென 2024 - 2026 ஆண்டுகளுக்கான கூட்டுத் திட்டமும்(Corporate Plan) 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டமும் (Annual Action Plans) தயாரிக்கப்பட்டிருப்பதை குழு அவதானித்தது.

<u>**குழுவின் விதப்புரைகள்**</u>

I. அரசியல் மற்றும் கொள்கை ரீதியான மாற்றங்களுக்கு நேரொத்த விதமாக, நிறுவன அலுவலர்களின் இடையீட்டுடன் எதிர்காலத்திற்காக நிறுவனத்திற்கு மிகவும் பொருத்தமான, இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் விரிவான திட்டமொன்றைத் தயாரித்தல்.

II. புதிய கூட்டுத் திட்டத்தின் பிரதியொன்றை குழுவிற்கும் கணக்காளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பித்தல்.

<u>**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள்/ நிறுவனங்கள்**</u>

தலைவர் -ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை

<u>**குழுவின் விதப்புரைகள் நிறைவேற்றப்படுதலின் முன்னேற்றம்**</u>

விதப்புரைகளை நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் 2025.06.30 ஆம் திகதி வரை குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை.

**03. <u>செயற்பாட்டுத் திட்டம்</u>**

2022 தொடக்கம் 2023 வரையான இரு வருடங்களுக்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்களின் பிரகாரம் அந்தந்த வருடங்களில் ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த ரூபா 81 மில்லியன் மதிப்பீட்டு செலவுத் தொகைக்குரிய 06 பணிகள் 2025 ஏப்ரல்

மாதம் 20 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்படாமை குறித்து குழு கவனம் செலுத்தியது.

## 3.1 மின்சார விநியோகத்தை மேம்படுத்தலும் விரிவுபடுத்தலும்

2022 ஆம் ஆண்டில் ரூபா 28 மில்லியன் செலவில் மின்சார விநியோகத்தை விரிவுப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட கருத்திட்டமானது ஜப்பான் நிதி உதவியின் கீழ் சூரியப்படல் தொகுதியொன்றை வழங்குவதற்கு தீர்மானித்ததைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டதோடு, சூரியப்படல் தொகுதியைப் பொருத்துவதற்காக ஜப்பான் நிறுவனமொன்று தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக குழுவில் வெளிக்கொணரப்பட்டது.

## 3.2 மின்சாரக் கட்டமைப்பின் பாதுகாப்புக்கு தருவிக்கப்பட்ட சாதனங்களை பிரதான கட்டமைப்புடன் இணைத்தல்

மின்சாரக் கட்டமைப்பின் பாதுகாப்புக்கு 2020 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட UPS கட்டமைப்புக்கான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு ரூபா 5,778,000 செலுத்தப்பட்டுள்ள போதிலும், 2025 ஆம் ஆண்டு வரையிலும் அது பிரதான கட்டமைப்புடன் இணைக்கப்படாது வைத்தியசாலை அறையொன்றில் வைக்கப்பட்டுள்ளமை குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையானது, திடீர் மின் தடைகளின் போது மோசமான பாதுகாப்பற்ற நிலைமையை தோற்றுவிக்கக் கூடுமெனவும், வைத்தியசாலை பணிப்பாளர் வழங்கல் அலுவலர்களின் விதப்புரைகளின் பேரில் ஏற்புடைய செலுத்துகைகளை மேற்கொண்டுள்ளமையை அவதானித்துள்ள குழு மேற்படி இரண்டு அலுவலர்களும் இந்த விடயம் குறித்து அறியாமல் இருந்தமை பாரதூரமான பிரச்சினை எனவும் வலியுறுத்தியுள்ளது.

## 3.3. இருதயச் சத்திரசிகிச்சையகத்துக்கு வெள்ளி இரும்பிலான கதவை பொருத்துதல்.

2022 ஆம் ஆண்டில் இருதயச் சத்திர சிகிச்சையகத்துக்கு 3 மில்லியன் ரூபாய் செலவில் வெள்ளி இரும்பிலான கதவொன்றை பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டு விலைமனு கோரப்பட்டு வழங்குநரொருவருக்கு அப் பணிக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்ட போதிலும், குறித்த நபரினால் கதவை பொருத்த முடியாது போனதால் மேற்படி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு மீளவும் இரண்டாவது தடவையாக விலை மனு கோரப்பட்டது. இருப்பினும், 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் 30 ஆகும் போது, அதன் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள கதவு வழியில் காற்று சுழற்சியில் பிரச்சனை காணப்படுவதால் வெள்ளிரும்பிலான கதவொன்றை பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதோடு, மேற்படி கதவை பொருத்தும் வரைக்கும் Air Curtains பொருத்துதல் மற்றும் வெளிப்பகுதி வளியற்றுப் போகச் செய்தல் போன்ற தற்காலிக முறைகளைப் பாவித்து சத்திரசிகிச்சையகம் செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குழுவினால் மேலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பணி ஒப்பந்தம் வழங்கப்பட்ட வழங்குநரினால் கதவு பொருத்தப்பட முடியாது போனதால் குறித்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு மீள விலை மனு கோரப்பட நேர்ந்ததாகவும், தற்பொழுது விலைப்பத்திர மீளாய்வு நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்திலுள்ளதாகவும் 2025 ஆம் ஆண்டு யூன் மாதத்துக்குள்

பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் வைத்தியசாலைச் சபையின் பணிப்பாளரும் வழங்கல் அலுவலரும் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த மேற்படி அத்தியாவசிய பணி 2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரை 03 ஆண்டுகள் தாமதமானமை தொடர்பாகவும் மேற்படி தாமதம் காரணமாக மேலதிகச் செலவு செய்யப்பட்டு தற்காலிக செயன்முறைகள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாகவும் குழு தமது அதிருப்தியை தெரிவித்தது.

## <u>3.4 தீ பாதுகாப்பு மற்றும் இனங்காணல் கட்டமைப்பை மீள நிறுவுதல்</u>

2023 ஆம் ஆண்டில் 30 மில்லியன் ரூபாய் செலவில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபையின் தீ பாதுகாப்பு மற்றும் இனங்காணல் கட்டமைப்பை மீள நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது 2025 ஏப்பிறல் 30 ஆம் திகதி வரையிலும் செயற்படுத்தப்படவில்லை எனவும், இப் பணி 2026 ஆம் ஆண்டுக்கான மூலதனத் தொகையில் மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் குழுவில் வெளிக்கொணரப்பட்டது.

மருத்துவமனையின் பழைய தீ பாதுகாப்புக் கட்டமைப்பு சேதமடைந்துள்ளதாகவும், அதனை புனரமைப்பதற்கு விலை மனு கோரப்பட்ட போது புனரமைப்பின் சிக்கல் மற்றும் செலவு அதிகம் எனத் தெரிவித்து எவரும் கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கவில்லை எனவும், அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் அதன் பணிகளை கட்டம் கட்டமாக மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாகவும் இன்றளவில் தற்காலிக தீ பாதுகாப்பு முறையொன்று பொருத்தப்பட்டுள்ளதாகவும், இந்த விடயம் தொடர்பாக கோட்டே

மாநகர சபையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வைத்தியசாலை சபையின் திட்டமிடல் அலுவலர் தெரிவித்தார்.

இக் கருத்திட்டத்துக்கு 2024 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் 43 ஆம் இலக்கத்தின் கீழ் 135 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, பொறுப்பு அலுவலராக வைத்தியசாலை பணிப்பாளரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2025 ஆம் ஆண்டு கிடைத்த 500 மில்லியன் ரூபாய் மூலதன நன்கொடையில் வேறு அத்தியாவசிய கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட காரணத்தினால் 2025 ஆம் ஆண்டில் இக் கருத்திட்டத்துக்கு நிதியை ஒதுக்க முடியவில்லை என்பதால் 2025 ஆம் ஆண்டுக்கு ஆற்றுப்படுத்த நேர்ந்ததாகவும், வைத்தியசாலை சபை 2024 ஆம் ஆண்டில் பெற்ற 400 மில்லியன் ரூபாய் மூலதன நன்கொடையில் 9% ஐ மாத்திரம் செலவு செய்து எஞ்சிய 91% ஐ பொது திறைசேரிக்கு திருப்பி அனுப்பியுள்ளதாகவும் இதற்கான பிரதான காரணமாக பணியாட்டொகுதியில் நிலவும் நிருவாக குறைபாடுகளை சுட்டிக்காட்ட முடியுமெனவும் சபையின் தலைவர் தெளிவுபடுத்தினார்.

வைத்தியசாலையொன்றுக்கு தீ பாதுகாப்பு சான்றிதழொன்று காணப்படாமை பெரும் பிரச்சினை என்பதும் குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

இச் சகல விபரங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்த குழுவானது, அதன் பொருட்டு கீழ் காணும் விதப்புரைகளை வழங்கியது.

<u>**குழுவின் விதப்புரைகள்**</u>

I. இப் பணிகளை நிறைவு செய்வதற்கு நீண்ட காலம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதால் இனியும் தாமதங்களை தடுத்து மிகத் துரிதமாக அப் பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
II. உத்தேச கருத்திட்டங்களை செயற்பாட்டுத் திட்டத்தில் சேர்த்தல் மற்றும் உரிய கால வரையறைக்குள் இடம்பெறுகிறதா என்பதை அவதானித்தல்.
III. இப் பணிகளில் ஏற்பட்ட தாமதம் தொடர்பாக பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டமை தொடர்பாக விசாரித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள்/நிறுவனங்கள்**

செயலாளர் – சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

தலைவர் – ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை

**குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றம்**

விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றம் 2025.06.30 ஆம் திகதி வரை குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை.

## 04. <u>2025ஆம் ஆண்டின் மூலதனச் செலவுகள்</u>

இந்த வைத்தியசாலைச் சபைக்கு 2025ஆம் ஆண்டுக்கு மூலதனச் செலவுகளுக்காக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், முதலாம் காலாண்டிற்கு 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டதாகவும், குறித்த நிதி ஒதுக்கீடுகள் அனைத்திற்குமாக கருத்திட்டங்கள் திட்டமிடப்பட்டு அவற்றின் பணிகள் நிறைவடையும் பௌதீக முன்னேற்றத்தின் அடிப்படையில் செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டு வருதாகவும், இன்றளவில் அண்ணளவாக 48 மில்லியன் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளதாகவும், 2025ஆம் ஆண்டிற்காக இன்னும் 400 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வனைத்தும் வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் தலைவர் தெரிவித்தார்.

## <u>05.பிரதம நிறைவேற்று அலுவலர் பதவியும் பொறுப்புக்களும்</u>

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் பணிப்பாளர் பிரதம நிறைவேற்று அலுவலரா என்பது தொடர்பில் தெளிவின்மை காணப்பட்டதாகவும் சில சந்தர்ப்பங்களில் முன்னாள் தலைவர் பணிப்பாளருக்கு அறிவிக்காது கீழ் நிலையிலுள்ள ஊழியர்களுக்கு நேரடியாக உத்தரவுகளை வழங்கியதன் காரணமாக சிக்கலானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளமை குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரதம நிறைவேற்று அலுவலர் முகாமைத்துவக் குழுவின் தலைவரென்ற போதிலும் அதற்கான நிதி அதிகாரம் இல்லையென்பதோடு, தலைவர் தங்களது கணக்கீட்டு அலுவலர் என்பதும் சபையின் நிதியை நிருவகிக்கும் பொறுப்பு ஒட்டுமொத்தப்

பணிப்பாளர் சபைக்குரியதென்பதும் குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை கூட்டிணைக்கப்பட்டுள்ள 1983ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபைச் சட்டத்தில் உறுதியாகக் குறிப்பிடப்படாத போதிலும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் சுற்றறிக்கை இல.01/2021 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் பணிப்பாளர் பிரதம நிறைவேற்று அலுவலர் (CEO) ஆவதுடன், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகள் மற்றும் செயலாற்றுகை தொடர்பான பொறுப்புக்களையும் வகிக்க வேண்டுமெனவும், பணிப்பாளரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிரச்சனைகள் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடும் பொறுப்பை அவர் கொண்டிருப்பதாகவும் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக் காட்டினார். வைத்தியசாலைச் சபையின் தலைவர் தெரிவித்தார்.

## <u>06.ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்தல்</u>

2022ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும், 2023ஆம் ஆண்டிற்கான அறிக்கையைத் தயாரித்து அமைச்சுக்கு ஒப்படைத்துள்ளதாகவும், 2024ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் பௌதீக மற்றும் நிதிப்பகுதியை நிறைவு செய்துள்ளதாகவும், கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கை கிடைக்கும் வரையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதென்றும், ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் நிதியாண்டு நிறைவடைந்து அடுத்து

வரும் ஆண்டின் மே மாதம் 31 ஆகும் போது மேற்கொள்ளுதல் வேண்டுமென்ற விதிகள் காணப்படுவதாகவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் திட்டமிடல் அலுவலர் விடயம் குறித்து விபரிக்கையில் தெரிவித்தார்.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

**I. 2023 , 2024ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை ஒரு மாத காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.**

**II. எதிர்காலத்தில் உரிய காலப்பகுதிக்குள் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.**

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள்/ நிறுவனங்கள்</u>**

செயலாளர் – சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

தலைவர் - ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை

**<u>குழு விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றம்</u>**

விதப்புரைகளை நடைமுறைப்படுத்தில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றம் 2025.06.30ஆம் திகதி வரையில் குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை.

## 07. <u>கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் சமர்ப்பிக்காமை</u>

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதி வெளியிட்டுள்ள கணக்காய்வு ஐய வினாக்களில் 2025 ஏப்பிறல் மாதம் 20ஆம் திகதியில் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்களின் எண்ணிக்கை 11 என்பதும் பதலளிப்பதற்குத் தாமதமடைந்தமை தொடர்பான தகவல்கள்

கீழ்வருமாறு காணப்படுவதையும் குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **கணக்காய்வு ஐய வினாக்களின் எண்ணிக்கை** | **இற்கு 30 ஏப்பிறல் மாதம் 2025 தாமதக் காலம் மாதங்கள்** |
|---|---|---|
| 2023 | 04 | 11-09 |
| 2024 | 07 | 06-01 |

11 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்படவில்லை என்பதோடு, அதற்கான பதில்கள் தற்போது தயார் செய்யப்பட்டு வருவதாகவும் தேர்தல் காலத்தில் ஆட்சேர்க்கப்பட்ட 1129 ஊழியர்கள் தொடர்பான ஐய வினாவிற்கு 2025.05.31 ஆம் திகதிக்கு முன்னதாக பதில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்பதும் குழுவில் வெளிக்கொணரப்பட்டது.

இந்த நடவடிக்கைகளில் காணப்படும் கணிசமான தாமதம் மற்றும் பொறுப்புக்களைத் தவறவிடப்பட்டுள்ளமை தொடர்பாக ஆராயப்பட வேண்டுமெனவும், கணக்காய்வு ஐயவினாக்களுக்கு உறுதியானதும் சீரானதுமான பதில்களை உரிய நேரத்தில் வழங்கப்பட வேண்டுமெனவும் குழு வலியுறுத்தியது.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

I. **கணக்காய்வாளர் தலைமையதிபதி இன்றளவில் ஶ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபைக்கு வழங்கியுள்ள அனைத்துக் கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2025.05.31ஆம் திகதியில் பதில்களை சமர்ப்பித்தல்.**

II. **எதிர்காலத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபைக்கு கணக்காய்வாளர் தலைமையதிபதி வழங்கும் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கும்போது இவ்வாறான தவறுகள் மற்றும் தாமதங்கள் இடம்பெறாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.**

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள்/ நிறுவனங்கள்**

செயலாளர் – சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு (விதப்புரைகள் இல. II)

தலைவர் - ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை (விதப்புரைகள் I மற்றும் II)

**குழு விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றம்**

விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றம் 2025.06.30ஆம் திகதி வரையில் குழுவிற்கு அறிக்கையிடவில்லை.

## 08. பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 2022, 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் கீழ்வருமாறு இடம்பெற்றுள்ளமை குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

*பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் 242*

| ஆண்டு | இடம்பெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | சுகாதார சேவை‹ பணிப்பாளர் நாயகத்தின் பங்கேற்பு | மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவனப் பணிப்பாளரின் பங்கேற்பு |
|---|---|---|---|
| 2022 | 07 | பங்குபற்றவில்லை | 03 |
| 2023 | 16 | 03 | 02 |
| 2024 | 14 | 07 | 02 |

மேற்படி பங்கேற்பின் அடிப்படையில் சுகாதார அமைச்சு மற்றும் பட்டப்பின் படிப்பு நிறுவகம் மூலமாக வைத்தியசாலைக்குக் கிடைக்க வேண்டியதான ஆலோசனைச் சேவைகளின் பங்களிப்பு உரியவாறு கிடைக்காமை குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த எண்ணிக்கையை விடவும் அதிகளவான தடவைகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டதாகவும், குறித்த தகவல்கள் தொடர்பாக மீள ஆராயப்பட வேண்டுமெனவும் ஏனைய கூட்டங்கள் இடம்பெறுகின்ற திகதியிலேயே ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் இடம்பெற்றமை 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் தனது பங்குபற்றுதல் குறைவடைவதற்கு ஒரு காரணமாக இருந்ததாகவும் அது தொடர்பான விடயங்களை முன்வைத்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கருத்து தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, நீண்டகாலமாக கூட்டத் திகதிகளை மாற்றுமாறு கோரியிருந்தாகவும், இம்மாதத்தில் அதனை மற்றியுள்ளதாகவும், கலந்துகொள்ளக்கூடிய அனைத்துக் கூட்டங்களிலும் தான் கலந்துகொண்டதாகவும், சட்டத்திற்கமைவாக பதவி வழியாக

கலந்துகொள்ள வேண்டிய அங்கத்தவர்களுக்கு பதிலாக வேறு பிரதிநிதிகளைப் பங்குபற்றச் செய்ய முடியாதெனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சட்டத் திருத்தத்தின்போது இவ்விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும், பதவி வழியாக கலந்துகொள்ள வேண்டிய அங்கத்தவர்களின் பங்கேற்பு குறைவடைவதால், அவர்களை நியமிப்பதன் மூலம் எதிர்பார்க்கும் நோக்கங்களை அடைவதிலும் குறிப்பாக அத்தியாவசிய அங்கத்தவர்கள் இல்லாது மேற்கொள்ளப்படும் பணிப்பாளர் சபைத் தீர்மானங்களின் சட்டரீதியான தன்மை தொடர்பிலும் சிக்கல்கள் ஏற்படலாம் எனவும் குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

I. சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் 2022ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை கூட்டங்களில் பங்குபற்றினாரா என்பது தொடர்பில் ஆராய்ந்து குறித்த தகவல்களை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல்.

II. தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகளுக்குப் பணிப்பாளர் சபையின் அனைத்து அங்கத்தவர்களும் கலந்து கொள்ளக்கூடியவாறு பணிப்பாளர் சபைக் கூட்டங்களை ஏற்பாடு செய்தல்.

III. பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் பங்குபற்றுதல் தொடர்பான அறிக்கைகளை முறையாகப் பராமரித்தல்.

IV. பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் அறிக்கைகளில் கையொப்பம் இடும் போது குறித்த கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் உண்மையாகவும் சரியாகவும் அறிக்கைகளில் உள்ளடக்கப்படுகின்றனவா என்பது தொடர்பாக ஆராய்ந்த பின்னர் கையொப்பம் இடுவதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள்/ நிறுவனங்கள்**

தலைவர் - ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை (விதப்புரை இல. I,II, III மற்றும் IV)

பணிப்பாளர் சபைச் செயலாளர் - ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை (விதப்புரை இல. I)

பணிப்பாளர் சபை - ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை (விதப்புரை இல. IV)

**குழு விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றம்**

விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றம் 2025.06.30ஆம் திகதி வரையில் குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை.

## 09. பணியாற்றொகுதி கட்டமைப்பு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபைக்கான அங்கீகரிக்கப்பட்ட பணியாற்றொகுதி கீழ்வருமாறு.

| **பணியாளர் தொகுதி** | **2024 டிசம்பர் 31ஆந் திகதியில் பணியாளர்களின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|
| | **அங்கீகரிக்கப் பட்ட** | **உண்மை யான** | **வெற்றிடங் கள்** |
| நிறைவேற்று | 23 | 17 | 06 |
| வைத்திய நிபுணர்கள் | 50 | 44 | 06 |
| வதிவிட வைத்திய நிபுணர்கள் | 10 | 01 | 09 |
| வைத்திய அதிகாரிகள் | 180 | 120 | 60 |
| நிறைவுகாண் வைத்திய அதிகாரிகள் | 137 | 96 | 41 |
| தாதியர் பணியாட்டொகுதி யினர் | 880 | 676 | 204 |
| எழுதுநர் மற்றும் உதவியாளர் சேவைகள் | 152 | 103 | 49 |
| ஏனைய பணியாட்டொகுதி யினர் | 124 | 94 | 30 |
| ஆரம்ப பணியாட்டொகுதி யினர் | 493 | 371 | 122 |
| **மொத்தம்** | **2049** | **1522** | **527** |

வைத்தியசாலையில் அங்கீகரிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகளின் பணியாட்டொகுதியினர் 180ஆக காணப்படுவதோடு, அதில் நிரந்தர அடிப்படையில் 121 வைத்தியர்களும், இரண்டாம் நிலை

அடிப்படையில் 24 பேரும், ஒப்பந்த அடிப்படையில் 38 பேரும் என்ற ரீதியில் 183 வைத்திய அதிகாரிகள் கடமையாற்றி வருவதாகவும், அதன்படி, மூன்று வைத்திய அதிகாரிகள் மேலதிகமாகக் காணப்படுவதாகவும் 2025 ஏப்ரல் மாத பணியாட்டொகுதியினர் தகவல்களின்படி நிரூபணமானது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பணியாட்டொகுதியினர் பற்றிய தகவல்களை மட்டும் உள்ளடக்கி இந்தத் தரவுக் குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

## 10. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்.

2024 டிசம்பர் 31 ஆந் திகதியளவில், இரண்டு வகை பதவிகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாமல், அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையை விட அதிகமாக 208 அதிகாரிகளும் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினுள் இல்லாத இரண்டு வகை பதவிகளுக்கு பின்வரும் வகையில் 140 அதிகாரிகளும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதையும் குழு அவதானித்தது.

| **பணியாளர் தொகுதி** | **பதவி** | **அங்கீகரிக்கப்பட்ட** | **உண்மையான** | **அங்கீகரிக்கப்படாத** | **அங்கீகரிக்கப்பட்ட தொகையை விஞ்சிய** |
|---|---|---|---|---|---|
| எழுதுநர் மற்றும் உதவியாளர் சேவைகள் | முகாமைத்துவ உதவியாளர் (MA-1-1) | - | 47 | 47 | - |
| ஏனைய பணியாட்டொகுதியினர் | பயிற்சி பெறும் ஊழியர்கள் | 25 | 30 | - | 05 |
| ஆரம்ப பணியாட்டொகுதியினர் | ஊழியர்கள் (SKS) | 50 | 253 | - | 203 |
| | சுகாதார உதவியாளர் | - | 93 | 3 | - |
| **மொத்தம்** | | | | <u>140</u> | <u>208</u> |

இந்த வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டபோது, ஓர்டர்லி (Orderly) பதவி காணப்பட்டதாகவும், பின்னர், சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில், அதற்கு சமமான பராமரிப்பாளர் பதவி

உருவாக்கப்பட்டதாகவும், அதன்படி, 2024ஆம் ஆண்டில் அனைத்து ஓர்டர்லி (Orderly) பதவிகளையும் சுகாதார சேவை உதவியாளர் பதவிகளில் உள்வாங்குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்ததாகவும், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்திய சபையின் பணிப்பாளர் சமர்ப்பித்துள்ள தகவல்களிலிருந்து தெரியவந்தது.

முன்னாள் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண, முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சர் விஷேட வைத்திய நிபுணர் (திருமதி) சீதா அரம்பேபொல, பி.ஜீ. மஹீபால, வைத்தியர் அசேல குணவர்தன, வைத்தியர் சுனில் டி அல்விஸ் மற்றும் சுனில் கலகம ஆகியோர் அடங்கிய குழு சுகாதார அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தியும், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபையின் முன்னாள் தலைவர் வைத்தியர் சாரங்க அழகப்பெரும, வைத்தியர் ரத்னசிறி ஏ. ஹேவகே, வைத்தியர் சி. காரியவசம், வைத்தியர் (திருமதி) சஞ்சீவனி ராஜசிங்க, வைத்தியர் ராஜிதா சில்வா, வைத்தியர் (திருமதி) ஜீவனி ராஜசிங்க, அனைத்து துறைத் தலைவர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கு 2024.06.27 ஆந் திகதி சுகாதார அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் குறிப்புகள் பின்வருமாறு குழுவின் அவதானத்திற்கு உட்படுத்தப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலின் போது, கடந்த ஐந்து ஆண்டுகளில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் சதவீதம் மற்றும் கட்டில் பயன்பாட்டு விகிதம் குறித்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபையின் முன்னாள் தலைவர், சமர்ப்பணமொன்றை (PowerPoint Presentation) வழங்கியதுடன், அதில் 'நோயாளிகளுக்கு குறைந்த விலையில் சிறந்த சுகாதார

சேவைகளை வழங்குபவர்களாக மாறுதல்' என்பது ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபையின் கருப்பொருளாகக் காணப்படுதல் வேண்டும் எனவும் முன்மொழிந்தார்.

மேலும், அந்த கலந்துரையாடலுடன் தொடர்பான கலந்துரையாடல் குறிப்பில், "பணியாட்டொகுதி பற்றாக்குறை தொடர்பான பல்வேறு சுற்றறிக்கைகள் காரணமாக, மருத்துவமனை சேவையை தொடர்ச்சியாகவும் முறைப்படுத்தப்பட்ட வகையிலும் அரசாங்கத்திற்கு நன்மை பயக்கும் வகையில் முன்னெடுத்துச்செல்ல முடியாத நிலைக்கு உட்பட்டுள்ளதோடு, இந்த விடயம் தொடர்பில் கருத்திற் கொண்டு, சுகாதார அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் சுகாதார செயலாளர் ஆகியோர் மருத்துவமனையில் தற்போதுள்ள அனைத்து வெற்றிடங்களுக்கும் தகுதியான நபர்களை ஆட்சேர்ப்பு செய்யவதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இது கடுமையாக கருத்தில் கொள்ளப்பட வேண்டியதொரு கூற்றென்பதையும் குழு அவதானித்தது.

அதன்படி, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது பின்வரும் விடயங்கள் வெளியாயின.

- ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபையின் பணிப்பாளர் சபையின் செயலாளர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதும்,
- மேலும், அந்தக் கூட்டத்தில் இதுபோன்ற விடயங்கள் கலந்துரையரடப்பட்டதாக பணிப்பாளர் நாயகத்தின் நினைவில் இல்லை என்பதும்,
- சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதிலும், "பல்வேறு சுற்றறிக்கைகள்

காரணமாக, மருத்துவமனை சேவையை தொடர்ச்சியாகவும் முறையாகவும் அரசாங்கத்திற்கு நன்மை பயக்கும் வகையில் முன்னெடுத்துச்செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது" என்ற கூற்றுடன் அவர் உடன்படவில்லை என்பதும்,

- பல்வேறு தேவைகளுக்கு ஏற்ப அவ்வப்போது சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டு, அவை தொடர்ந்து இற்றைப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதோடு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை ஒரு குறிப்பிட்ட முறையியலின் பிரகாரம், பணிப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்படுவதால், சில சுற்றறிக்கைகள் மருத்துவமனைக்கு நேரடியாகப் பொருந்தாது என்பதும்,

  கூட்ட அறிக்கையில் அத்தகைய கூற்றைச் சேர்ப்பதற்கு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தமது மருத்துவமனையை அரசாங்கத்திற்கு நன்மை பயக்கும் வகையில் முன்னெடுத்துச் செல்வதில் உள்ள தடைகளை முதற்கண் அடையாளம் கண்டிருக்க வேண்டும் என்பதை குழு அவதானித்தது.

- ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபைக்கு இடையூறு விளைவிக்கும் சுற்றறிக்கைகள் அடையாளம் காணப்படவில்லை எனவும், இந்தக் கூட்டம் அன்றையதினம் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் அப்போதைய தலைவரால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பித்தலை (Power Point Presentation) அடிப்படையாகக் கொண்டு நடைபெற்றதாகவும், அந்த சமர்ப்பித்தலிலும் அத்தகைய சுற்றறிக்கைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும், அங்கு அத்தகைய விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தனக்கு நினைவில் இல்லை எனவும், இது தொடர்பில் கருத்துக்களை முள்வைத்த ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

- ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபையின் செயற்பாட்டிற்கு தடங்கலை ஏற்படுத்தும் சுற்றறிக்கைகளை அடையாளம் காணாமல், இத்தகைய கூற்றினை உள்ளடக்கிய கூட்ட அறிக்கையில் கையொப்பமிட்டது குறித்து குழு தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது.

2024.06.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டம் தொடர்பான அறிக்கையில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

- "வைத்தியசாலையில் தற்போதுள்ள அனைத்து வெற்றிடங்களுக்கும் தகுதியான நபர்களை ஆட்சேர்ப்பதற்கு சுகாதார அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.
- "அதன்படி, அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்து வழங்குவதற்காக, சுகாதார சேவை உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் சாரதி போன்ற பதவிகளுக்கு தற்போது சுகாதார அமைச்சிற்கு கிடைத்துள்ள விண்ணப்பங்களிலிருந்து, நேர்முகப் பரீட்சையின் மூலம் தகுதியான நபர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும், ஏனைய பதவிகளுக்கு வழமைபோல் விண்ணப்பங்களை கோருவதன் மூலம் தகுதியான நபர்களை ஆட்சேர்ப்பதறகும் அங்கீகாரம் வழங்கப்பட்டது."

➢ சுகாதார திணைக்களத்தில் நிலவும் பதவிகளின் சிக்கல் தன்மை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை ஓர் அரச தொழிற்முயற்சியாகக் காணப்படுதல் மற்றும் அங்கு ஏராளமான நானாவித தரங்கள் காணப்படுவதன் காரணமாக தொழில்சார் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும், ஆகையால், ஏனைய அரச தொழிற்முயற்சிகளுக்கு

நிகராக இதன் உள்ளக செயன்முறையானது மிகவும் எளிமையானதாக இருக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ‘இதற்கமைய சுகாதார அமைச்சுக்கு நிகரான பதவிகள் அதாவது, நிபுணத்துவ வைத்தியர், வைத்தியர், தாதி உத்தியோகத்தர்கள், துணை வைத்தியர்கள் மற்றும் நிறைவுகாண் வைத்தியர்களைத் தவிர ஏனைய சகல வைத்தியர் அல்லாத பதவிகளுக்கு அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இரண்டு சம்பள குறியீடுகளில் ஆட்சேர்ப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது

- ‘ஓர்டர்லி, இரசாயன ஆய்வுகூட எழுதுவினைஞர், சுகாதார அலுவலக உதவியாளர் ஆகிய சகல பதவிகளும் சுகாதார அலுவலக உதவியாளர் PL-1 பதவிக்கும், நோயாளர் படுக்கை அறை ( வோர்ட்) எழுதுவினைஞர், எழுதுவினைஞர் – காசாளர், கணக்காய்வு உதவியாளர், வரவேற்பு உத்தியோகத்தர் ஆகிய பதவிகள் முகாமைத்துவ உதவியாளர் MA I-I பதவிக்குமென, ஒரே தொகுதியில் ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

- ‘மேலும், இது புதிதாக ஆட்சேர்க்கப்படும் பதவிகளுக்கு மாத்திரம் ஏற்புடையதாவதுடன், தற்போது காணப்படும் பதவிகள் மீது தாக்கம் செலுத்துவதில்லை என்பதும் இதன்போது குறிப்பிடப்பட்டது.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சரது MH/AD//01O/8SJGH இலக்க மற்றும் 2024.11.12 ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக முன்வைக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை சபையின் தலைவரது SJ/ED/AO/2024 ஆம் இலக்க மற்றும் 2024.10.30 ஆந் திகதிய கடிதத்துக்கான பதிலாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாயர் நாயகம் சுகாதார மற்றும் ஊடக

அமைச்சின் செயலாளருக்கு " பணியாட் குழுவினரை ஆட்சேர்த்தல் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை" எனும் தலைப்பில் 2025.05.02ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பின்வரும் விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளமையை குழு அவதானித்தது.

- இந்த ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வது தொடர்பில், அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்வதற்காக கௌரவ பிரதமரின் செயலாளரின் தலைமையில் தாபிக்கப்பட்டுள்ள குழுவின் அங்கீகாரம் பெறப்படவில்லை என்பதையும்,

- வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டன் பின்னர், குறிப்பிட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை சரியாகக் குறிப்பிட்டு ஆட்சேர்ப்பதற்கான பகிரங்க விளம்பரங்களை வெளியிட்டு விண்ணப்பப் படிவங்களை கோரி, ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமை.

- சுகாதார அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களிலிருந்து நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமை பெறுவோரை சுகாதார அலுவலக உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் சாரதி எனும் பதவிகளுக்கு தெரிவு செய்வது ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு செயன்முறை இல்லை எனவும்,
- ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைக்கே தனித்துவமானதொரு ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரிக்கும் வரையில் சுகாதார அமைச்சின் ஒரே சமமான பதவிகள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும், முகாமைத்துவ சேவைககள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின்

*பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் 242*

DMS/1758/Jaya.H/2018இலக்க மற்றும் 2018.06.11 திகதிய கடிதத்தின் வாயிலாக அறிவுறுத்தப்பட்டுள்ளபோதிலும் இதன் மீது கவனம் செலுத்தப்படாமை.

- ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலையை ஒரு அரச தொழில்முயற்சியாகக் கருதி இதற்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள சம்பள குறியீடுகளின் கீழ் மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு 2024.06.28 ஆந் திகதிய 483:12:2 ஆம் இலக்க பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளபோதிலும், அரசாங்க சேவையிலான சம்பள செயன்முறையே வைத்தியசாலைகளுக்கும் அப்போது அனுமதிக்கப்பட்டிருந்தமையால், ஒரு தொழில்முயற்சியாகக் கருதி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முன்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் குறிப்பிட்ட திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியபோதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமையும், பதவிப் பெயர்களை திருத்துவதற்கான அங்கீகாரம் பெறப்படாமையும்

- 2024.06.28ஆந் திகதிய 483:12:2 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய, சம்பளத்தில் 35% ஐ உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் சேர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளபோதிலும், குறிப்பிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம், சுகாதார அமைச்சு அல்லது அரசாங்க திணைக்களங்களின் ஒரே சமனான தரங்களிலான சம்பளம் தொடர்பாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளபோதிலும், இதனை தவறாக பொருள்கோடல் செய்து பணிப்பாளர் சபையானது பிழையான தீர்மானமொன்றை மேறகொண்டுள்ளதாகவும்,

- முகாமைத்துவ உதவி ஊழியர்களை ஆட்சேர்க்கும் பிரச்சினை மீது கவனம் செலுத்தப்படாமை,

- 2024.07.26ஆந் திகதிய தேர்தல் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 05உடன் இசைவாக்கம் பெறாத வகையில் 2024.07.30ஆந் திகதி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை

இந்த அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலையின் சபையானது 48 முகாமைத்துவ உதவியாளர்கள், 06 சாரதிகள் மற்றும் 95 சுகாதார அலுவலக உதவியாளர்களை ஆட்சேர்க்கையில் பின்பற்ற வேண்டிய முறையான செயன்முறை மற்றும் உரிய நடைமுறைகளை பின்பற்ற வில்லை என முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளமையை குழு அவதானித்தது.

இந்த ஆட்சேர்ப்பு நடைமுறையானது (காணப்படும் விண்ணப்பப்படிவங்களிலிருந்து நேர்முகப் பரீட்சைகள் மூலம் தெரிவு செய்தல்) ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு செயன்முறையல்ல எனவும், இச்செயன்முறையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

சுகாதார அமைச்சில் அத்தகைய ஒரு தொகை விண்ணப்பப்படிவங்கள் காணப்படவில்லை என்பதையும் குழு அவதானித்தது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை சபையின் தலைமை கணக்காய்வாளர் முன்வைத்த தெளிவுபடுத்தலுக்கு ஏற்ப, அவர் 2024ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கடமைகளை பொறுப்பேற்பதற்கு முன்பிருந்தே இவ்வாறு ஆட்சேர்க்கப்பட்டுள்ள 149பேருக்கும் சில

மாதங்கள் சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அப்போதிருந்த பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் நியமனங்கள் பணிப்பாளரினால் வழங்கப்பட்டிருத்தல் காரணமாக, இவற்றை நிராகரிப்பதற்கு சிரமமான சூழ்நிலையில் குறிப்பிட்ட அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளமை குழுவில் வெளியானது.

குறிப்பிட்ட கூட்டத்தில் கலந்துகொண்ட தொழிற்சங்க பிரதிநிதிகள், இக்கலந்துரையாடல் குறிப்புகள் போலி ஆவணமெனக் குறிப்பிட்டு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளமையை குழு அவதானித்தது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை சபையின் பணிப்பாளர் சபை செயலாளர் கருத்துத் முன்வைத்தலுக்கமைய, இக்கூட்டக் குறிப்பினை தயார் செய்யும் காலத்தில் அவர் சுகவீன விடுமுறையில் இருந்தமையால், இக்காலப்பகுதியில் பணிப்பாளர் சபையின் செயலாளராக முகாமைத்துவ பணிப்பாளர் திருமதி ஹந்ரா ரணசிங்க செயற்பட்டிருந்தார்.

தேர்தலின் பின்னர் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டதன் பின்னர், அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த மேலும் இத்தகைய 47 பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், பணிப்பாளர் சபை தீர்மானங்கள் மற்றும் முன்னாள் தலைவரது செயற்பாடுகள் காரணமாக இதற்கு முன்னர் இடம்பெற்ற செயற்பாடுகளை நிறுத்துத்துவதில் சிரமங்கள் காணப்பட்டதாகவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை சபையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

I. **இந்த முழுமையான செயற்பாடு தொடர்பில் முறையான விசாரணையொன்றினை நடத்தி பொறுப்புக் கூறவேண்டிய அனைத்து அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையொன்றை குழுவிற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் சமர்ப்பித்தல்.**

II. **பூர்வாங்க விசாரணைச் சபைகள், முறையான ஒழுக்காற்று விசாரணைச் சபைகள் மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் 104 (1) இன் கீழ் விசாரணைகளை நடத்துவதுடன் தொடர்புடைய விசாரணைச் சபைகளை நியமிக்கையில் பொறுப்புணர்வு மிக்க, அறிவும் அனுபவமும் கொண்ட அலுவலர்களை நியமித்தல் மற்றும் விசாரண அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை மற்றும் மேற்கொள்ளப்பட்ட தவறுகள் பற்றி பரிசீலனை செய்தல்.**

III. **மேற்கூறிய ஆட்சேர்ப்புகளுடன் தொடர்புடையதாக 2024.06.27ஆம் திகதி சுகாதார அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடல் குறிப்புக்களைத் தொகுத்தவர் யார்?, அதன்போது உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக அதில் கலந்து கொண்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மேற்படி கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் இதன் உள்ளடக்க விடயங்கள் தொடர்பாக முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள் உள்ளனவா என்பதையும், அதன் உள்ளடக்க விடயங்களின் உண்மைத் தன்மையையும் ஆவணத்தின் உண்மைத் தன்மை தொடர்பிலும் விடயங்களை ஆராய்ந்து அது பற்றிய அறிக்கையொன்றை குழுவுக்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் சமர்ப்பித்தல்.**

*பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் 242*

**<u>விதப்புரைகளைச் செயற்படுத்த வேண்டிய/ பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்கள்/ நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

**<u>குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுவதல் பற்றிய முன்னேற்றம்</u>**

விதப்புரைகளை நடைமுறைப்படுத்துதல் பற்றிய முன்னேற்றம் 2025.06.30 ஆம் திகதி வரையில் குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

## 11. <u>Laundry Supervisor பதவி</u>

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபைக்குள் இடம்பெற்றுள்ள சட்டவிரோத ஆட்சேர்ப்புகளுக்கு சம்பளங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், சலவை மேற்பார்வையாளர் பதவிக்கு சட்டப்பூர்வமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஓர் அலுவலருக்கு ஐந்து மாதக் காலப்பகுதிக்கு தொடர்ச்சியாக சம்பளம் வழங்கப்படவில்லை என்பதையும், இந்த அலுவலர் வைத்தியசாலைக்கு தனது சேவைகளை வழங்கியுள்ளார் என்பதையும், கைவிரல் அடையாளப் பதிவு இயந்திரத்தில் தனது தினசரி வருகையைப் பதிவு செய்து, பற்றுச்சீட்டு செலுத்தல்களை அனுமதிப்பதற்காக கையொப்பம் இட்டிருந்தமையையும், பணியாட்டொகுதியினருக்கு வைத்தியசாலையால் இலவசமாக வழங்கும் மருந்து வசதியையும் அனுபவித்துள்ளார் என்பதையும் குழு அவதானித்தது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் தலைவரின் கருத்துரைத்தலுக்கமைய, இதில் குறிப்பிடப்பட்ட சலவை மேற்பார்வையாளர் பதவி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதிக்குரிய ஒரு பதவியாக இருந்த போதிலும், அதற்கான

ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை என்பதையும், இந்த ஆட்சேர்ப்புக்கு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்படவில்லை என்பதையும், 2024 நவெம்பர் மாதத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையில் அனைத்து ஆட்சேர்ப்புகளையும் பரிசீலனை செய்வதற்காக நடைபெற்ற பணிப்பாளர் சபை உப குழுக் கூட்டத்தில் இந்நிலைமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் குழு அவதானித்தது.

அத்துடன், வைத்தியசாலைக்குத் தேவையான சலவைச் சேவைகளை வெளிப்புற வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட காரணத்தால் மேற்படி பதவியானது அவசியமற்ற பதவியாகியிருந்தது என்பதையும், இது தொடர்பாக தொழில் நியாய சபையால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையில் குறிப்பிட்டுள்ளதன் படி, சேவை பெறப்பட்ட காலத்திற்கான சம்பளத்தை வழங்கி சம்பந்தப்பட்ட நபரின் சேவையை விரைவில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதையும் குழு அவதானித்தது.

முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியின்றி எந்தவொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்ய முடியாது என்பதையும், நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதிக்கு உள்ளீர்க்கப்படும் பதவியாகவிருப்பினும் கூட புதிய ஆட்சேர்ப்புக்கு அங்கீகாரம் அவசியமென்பதையும் மேற்படி திணைக்களத்தின் பணிப்பாளர் சுட்டிக் காட்டினார்.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

I. **அழைப்புக் கடிதமொன்றை வழங்கி நிறுவனத்தின் ஊழியராகப் பணியாற்றும் மேற்படி ஊழியரின் சேவை குறித்து பணிப்பாளர் சபை மேற்கொள்ளும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் 01**

**மாத காலப்பகுதிக்குள் குழுவுக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அறிவித்தல்.**

**<u>விதப்புரைகளைச் செயற்படுத்த வேண்டிய/பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்கள்/நிறுவனங்கள்</u>**

தலைவர் - ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை

**<u>குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுவதிலுள்ள முன்னேற்றம்</u>**

விதப்புரைகளை நடைமுறைப்படுத்துதல் பற்றிய முன்னேற்றம் 2025.06.30 ஆம் திகதி வரையில் குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

## 12. <u>நிறுவனத்தின் நிதி முறைகேடுகள் மற்றும் நட்டமடைதல்</u>

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் மனிதவள முகாமைத்துவம், சொத்து முகாமைத்துவம், வருமான முகாமைத்துவம் மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகிய சகல பிரிவுகளுக்குரிய ஒட்டுமொத்த செயற்பாடும் முறையற்றுள்ளதாகவும், வைத்தியசாலை கடந்த ஐந்து ஆண்டுகளாக தொடர்ச்சியாக நட்டத்தை அடைந்துள்ளதெனவும், பிரதானமாக சட்டவிரோத நியமனங்கள் மற்றும் சட்டவிரோதக் கொடுப்பனவுகள் காரணமாக பாரிய நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், திறைசேரியிலிருந்து கிடைக்கின்ற நிதியானது அந்நியமனதாரர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக தவறாக கையாளப்படுகின்றமை இதன் மூலம் தெளிவாகின்றதெனவும் கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டினார்.

## 13. <u>கொடுப்பனவுகளை மேற்கொள்வதிலுள்ள முறைகேடுகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள்</u>

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் அதிகாரிகளுக்குச் சட்டவிரோதமாகச் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக குழு அவதானித்தது. 2021 யூலை 28 தொடக்கம் 2024 யூலை 15 வரையிலான காலப்பகுதியினுள் ஏற்பட்ட வெற்றிடமொன்றுக்கு தழுவல் கடமை அடிப்படையில் பிரதிப்பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி அலுவலருக்கு நிரந்தர பதவிக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், தழுவல் கடமைக்கான கொடுப்பனவுகள், மேலதிக கடமைக்கான கொடுப்பனவுகள் மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள் உள்ளிட்ட பாரியதொரு தொகை செலுத்தப்பட்டிருப்பதை குழு அவதானித்தது. தாபன விதிக்கோவையின் 13.7ஆம் பிரிவிற்கமைவாக தழுவல் கடமைக்காக நியமிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு மேலதிகக் கொடுப்பனவு வழங்குவது சட்டவிரோதமானது என்பதுடன், மேற்படி ஏற்பாடுகளுக்கு முரணாக தழுவல் கடமைக்காக சம்பளத்தில் ¼ பங்கு கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது என்பதைக் குழு அவதானித்தது.

மேலும், அரச சேவையில் இணையான பதவிகளுக்கு மட்டுமே அமைச்சரவை தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்ட 35% கொடுப்பனவும் ஓய்வூதியம் இல்லாத காரணத்தால் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையிலுள்ள சகல பதவிகளுக்கும் இந்த 35% கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதுடன், அதுவும் சட்டவிரோதமானது என்பதனைக் குழு அவதானித்தது.

மேற்படி சட்டவிரோதக் கொடுப்பனவுகள் காரணமாக 2022ஆம் ஆண்டில் ரூ. 162.47 மில்லியனும், 2023ஆம் ஆண்டில் ரூ. 158 மில்லியனுக்கும் அதிகமான தொகை மேலதிகமாகச்

செலுத்தப்பட்டுள்ளது என்பதையும் குழு அவதானித்தது. இச்செலவுகள் முறைப்படுத்தப்பட்டால், திறைசேரி ஒதுக்கீடுகள் இல்லாமலேயே நிறுவனத்தைச் செயற்படுத்த முடியும் என்பதைக் குழு அவதானித்ததுடன், முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் (SoR) இல்லாமையே இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும் என்பதும் அவதானிக்கப்பட்டது. இதற்குரியதான நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு 2025 சனவரி மாதத்தில் சுகாதார அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பது குழுவுக்குத் தெரிய வந்தது.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

I. **ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் நிதி நிர்வாகத்தில் உள்ள முறைகேடுகள், நிர்வாகப் பலவீனங்கள் மற்றும் மருத்துவமனையின் முன்னேற்றத்திற்குப் பங்களிக்காத அனைத்து நிலைமைகள் குறித்தும் முறையான விசாரணையொன்றை நடத்துதல்.**

II. **ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபைக்குரிய சகல பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் உள்ளனவா என்பதை பரிசீலனை செய்து அவ்வாறில்லாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெறல்.**

III. **சகல சட்டவிரோதக் கொடுப்பனவுகள் தொடர்பாக விசாரணை செய்து அவற்றை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.**

IV. **இந்த நிறுவனத்தில் ஊழியர்களுக்கு நியமனங்களை வழங்கல், முறையாக இணைப்புச் செய்தல் மற்றும் சம்பளம் வழங்குதல் ஆகிய**

**முழுமையான செயற்பாடு தொடர்பில் முறையான விசாரணையொன்றினை நடத்துதல்.**

V. **முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பதவிகள் தொடர்பாக முறையான, சரியான மற்றும் துரிதமான நடவடிக்கைகளை எடுத்தல்.**

VI. **ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் ஊழியர்களுக்கு சட்டபூர்வ உரித்தற்ற ஏதேனும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருப்பின் அது தொடர்பாக ஆராய்ந்து அவற்றை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.**

VII. **ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையால் சம்பளக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளும்போது பின்பற்றப்படும் மாதிரிப் படிவங்களிலுள்ள உள்ள முரண்பாடுகளை நீக்கி முழு பணியாட்டொகுதியினருக்கும் சமனான மாதிரிப் படிவங்களைப் பயன்படுத்துதல்.**

VIII. **ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைகள் அறவிடப்படாமை தொடர்பாக ஆராய்ந்து அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.**

**இவ்வனைத்து நடவடிக்கைகள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றை 02 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பிரதியிட்டு குழுவிடம் சமர்ப்பித்தல்.**

IX. **ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையால் வகுத்து அனுப்பப்பட்டுள்ள பதவிகளுக்கான சரியான நடைமுறைகளை 02 மாதங்களுக்குள் அங்கீகரித்து வழங்கல்.**

*பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் 242*

**விதப்புரைகளைச் செயற்படுத்த வேண்டிய/பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்கள்/நிறுவனங்கள்**

செயலாளர் - சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு (விதப்புரை இலக்கம் I தொடக்கம் IX வரை)

பணிப்பாளர் நாயகம் - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் (விதப்புரை இலக்கம் IX)

**குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுவதிலுள்ள முன்னேற்றம்**

விதப்புரைகளை நடைமுறைப்படுத்துதல் பற்றிய முன்னேற்றம் 2025.06.30 ஆம் திகதி வரையில் குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

## 14. வைத்தியசாலையின் செயலாற்றுகை மற்றும் பணியாட் டொகுதியின் அளவு

வைத்தியசாலையில் தினமும் 300-500இற்கும் இடைப்பட்ட நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறுவதாகவும், இரசாயன ஆய்வு கூடங்கள் மற்றும் கதிரியக்கம் போன்ற பிற சேவைகளுக்காகவும் அதிகளவான நோயாளர்கள் வருகை தருவதாகவும், சராசரியாக வருடமொன்றுக்கு சுமார் 178,000 நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதாகவும், நிரம்பியுள்ள கட்டில்களின் சதவீதமானது (Bed Occupancy Rate) சாதாரண கட்டில்களுடன் ஒப்பிடுகின்ற போது குறைவாக காணப்பட்ட போதிலும் விசேட/கட்டணம் செலுத்தும் வாட்டுக்களில் (Special/Paying Wards) இது அதிகமாக இருப்பதென்பதும் இங்கு தெரிய வந்தது.

மேற்கூறப்பட்ட விடயங்களுக்கமைய வெளி நோயாளர் பிரிவு (Outpatient Department) மற்றும் உட்சேர்க்கப்படும் எண்ணிக்கையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு குறைந்த எண்ணிக்கையிலான நோயாளர்களுக்கே சேவை வழங்கப்படுவதாக பொருள் கொள்ளக் கூடாது என்பதையும், அந்த அடிப்படையின் மீது மருத்துவமனைச் செயற்பாடுகளைத் தீர்மானிக்க முடியாதென்பதையும் குழு அவதானித்தது.

## 15. <u>2023.07.21ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது உப குழுவினூடாக வழங்கப்பட்டிருந்த விதப்புரை இலக்கம் 07 (ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையை செயற்றிறன்மிக்க அரச முயற்சியாண்மை யாக மாற்றுதல்.)</u>

2023 யூலை 21ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய இரண்டாவது உப குழுவினால் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபைக்கு திறைசேரியிலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ளாமல் செயற்படும் சுயநிதி வியாபாரமாக மாற்றுவது தொடர்பில் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு/ கணக்கீட்டு அலுவலருக்கு வழங்கப்பட்ட விதப்புரைகள் தொடர்பில் குழு கவனம் செலுத்திய அதேவேளை, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையை வியாபார மாதிரிக்குள் தரமான சேவையை மலிவான விலையில் வழங்கும், ஏனைய தனியார் வைத்தியசாலைகளின் விலை ஒழுங்குறுத்தலுக்கும் வழிகாட்டும் வகையிலான, இலாபமீட்டும் செயற்றிறன்மிக்க அரச முயற்சியாண்மையாக இயங்கும் வைத்தியசாலையாக மாற்றுவது மிகவும் பொருத்தமாகும் என்பதனை குழு வலியுறுத்தியது.

## 16. <u>வைத்தியசாலையின் எதிர்கால முகாமைத்துவ மாதிரி</u>

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் முகாமைத்துவ மாதிரியானது தோல்வியடைந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், எனவே மேற்படி வைத்தியசாலை மற்றும் விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை ஆகியவற்றை ஒரே நிர்வாகப் பொறிமுறையின் கீழ் அல்லது நிலவும் வளங்களை மிக உயரிய மட்டத்தில் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான வியாபார மாதிரியொன்றின் கீழ் தரமான சேவையை வழங்கக் கூடிய நிலைமைக்கு மாற்றியமைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்பதனை குழு அவதானித்தது.

எனினும் விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் நிர்வாகக் கட்டமைப்பிற்கமைய ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை மற்றும் விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை ஆகியவற்றை ஒரே நிர்வாகப் பொறிமுறையின் கீழ் கொண்டுவருவது கடினமானது என்பதனால் பொருத்தமான வியாபார மாதிரியொன்றின் கீழ் வளங்களை மிக உயரிய மட்டத்தில் பயன்படுத்தி தரமான சேவையை வழங்கும் நிலைமைக்கு மாற்றியமைப்பது பொருத்தமானதென்பதையும் குழு அவதானித்தது.

இதற்கு மேலதிகமாக, வைத்தியசாலையை முழுமையான அரச அல்லது முழுமையான தனியார் மாதிரியொன்றுக்கு இட்டுச் செல்வது இச்சந்தர்ப்பத்தில் கடினமானதாக இருக்குமென்ற போதிலும், இடைக்கால மாதிரியொன்றாக அதாவது தனியார் வைத்தியசாலை களுக்கு செயற்படுத்தப்படுகின்ற ஒழுங்குறுத்தல் மாதிரியொன்றிற்கு அமைய இந்த வைத்தியசாலையை நடாத்திச் செல்ல முடியுமா என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும், அவ்வாறானதொரு மாதிரியொன்றினூடாக நோயாளர்களுக்கு நியாயமான விலைகளில் சேவைகளை பெற்றுக்கொடுப்பதனை உறுதிப்படுத்த முடியுமென்பதையும் குழு அவதானித்தது.

<u>குழுவின் விதப்புரை</u>

**I. அரச முயற்சியாண்மைகளை ஒன்றிணைத்தல் தொடர்பான தீர்மானங்களையும் கவனத்திற் கொண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைச் சபையின் அபிவிருத்திக்கு அவசியமாகும் வகையில் 1983 ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபைச் சட்டத்தினை திருத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

<u>விதப்புரைகளைச் செயற்படுத்த வேண்டிய/ பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்கள்/ நிறுவனங்கள்</u>

செயலாளர் - சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

<u>குழுவின் விதப்புரைகளை நிறைவேற்றுதல் பற்றிய முன்னேற்றம்</u>

விதப்புரைகளை நடைமுறைப்படுத்துதல் பற்றிய முன்னேற்றம் 2025.06.30ஆம் திகதி வரையில் குழுவிற்கு அறிக்கையிடப்படவில்லை.

## 17. <u>வருமானங்களை ஈட்டிக் கொள்ளல் மற்றும் முகாமைத்துவம்</u>

வைத்தியசாலையின் வருமானம் குறைவடைந்தமைக்கு நோயாளர்கள் கட்டணம் செலுத்தாமல் வெளியேறிச் செல்லல் மற்றும் வைத்தியசாலைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவைகளை அறவிட்டுக் கொள்ளாமை ஆகியன பிரதான காரணங்களாக இருப்பதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதனைக் குழு அவதானித்தது.

மேலும் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் கட்டணங்கள் மிகவும் குறைவாக இருப்பது, வைத்தியசாலையின் மருந்தகம் வெளித் தரப்பினர் ஒருவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருப்பது போன்ற விடயங்கள் இதில் தாக்கம் செலுத்தியுள்ளதையும் குழு அவதானித்தது.

எனினும், தற்போதும் மருந்துகள் அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்திடம் இருந்து 10-15% இலாபத்துடன் பெறப்படுவதால் அதனை வைத்தியசாலையின் கீழ் கொண்டுவருவது மருந்துகளின் விலைக் குறைப்பிற்கு குறிப்பிடும் அளவிலான ஒத்துழைப்பை வழங்காது என்பது குழுவிற்கு தெரியவந்தது.

## 18. டிஜிட்டல் மயமாக்கல்

புதிய தொழில்நுட்பப் பயன்பாட்டுடன் கூடியதாக டிஜிட்டல் மயப்படுத்தும் (Digitalization) நடவடிக்கையினை மிகத் துரிதமாக நிறைவு செய்யுமாறு 2023 யூலை 21ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய இரண்டாவது குழுவினால் கணக்கீட்டு அலுவலருக்கு விதப்புரை வழங்கப்பட்டிருந்தது.

அதன் முன்னேற்றம் தொடர்பிலான விடயங்களின் போது, வைத்தியசாலையின் டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாடு இடம்பெற்று வருவதும், அதில் இரு கட்டமைப்புக்கள் இயங்குவதையும், செயற்பாடுகளில் 85% இற்கு மெல் தற்பொழுது டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது என்பதும், ஆய்வுகூட அறிக்கைகள் கையடக்க தொலைபேசிகளுக்கு SMS ஊடாக அனுப்பி வைக்கப்படுவதும், இலத்திரனியல் மருத்துவ அறிக்கை (Electronic Medical Records) சார்ந்த விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குழுவிற்கு தெரியவந்தது.

## 19. பணிப்பாளர் சபைக்காக மின்னணு ஆவணங்கள் முகாமைத்துவ முறைமையொன்றைத் (Electronic Document Management System) தயாரித்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் சபைக்கு மின்னணு ஆவண முகாமைத்துவ முறைமையொன்றை (Electronic Document Management System) தயாரித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரிப்பதுடன் தொடர்புடைய ஒப்பந்தம் 2015.11.26ஆந்

திகதி பணியாட்டொகுதி பணிப்பாளரின் மனைவி பணிப்பாளராக கடமையாற்றிய கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டது. அம்மென்பொருளுக்காக ரூபா 1.8 மில்லியனையும் scanning மற்றும் uploading பணிகளுக்காக 2019.12.31ஆந் திகதி 19.7 மில்லியனையும் செலவிடுவது தொடர்பாக தனிநலன் சார்ந்த முரண்பாடுகள் காணப்படுகின்றமை யாப்பு ரீதியான மற்றும் சட்டரீதியான சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. ஆதலால் 2023ஆம் ஆண்டு யூலை மாதம் 21ஆந் திகதி அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய இரண்டாவது உப குழுவில் இது தொடர்பான முறையான ஒழுக்காற்று விசாரணையை துரிதமாக மேற்கொள்ள வேண்டுமெனவும், விசாரணைகள் தாமதமாவதற்கான காரணங்கள் அடங்கிய விபரமான அறிக்கையொன்றயும், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்றையும் அமைச்சின் செயலாளர் ஒரு வாரத்திற்குள் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் குழு பரிந்துரைத்தது.

2019ஆம் ஆண்டு  பெப்புரவரி மாதம் 11ஆந் திகதி அப்போதைய தலைவரின் ஆலோசனைக்கு அமைவாக scanning மற்றும் uploading பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன என்பதையும், உரிய கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியில் ஸ்கேன் செய்து பதிவேற்றப்பட்ட தரவுகள் மேலும் வைத்திய சாலையில் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், நோய் நிலை அறிக்கைகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு எடுக்கும் இடத்தை குறைக்கும் நோக்கத்தில் இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குழுக் கூட்டத்தின்போது தெரியவந்தது.

அவ்வாறே, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் இவ்வறிக்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், இதுவரை எவ்வித சட்டரீதியான சிக்கல்களும் ஏற்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. பத்திரிகை அறிவித்தல் ஊடாக விலைகள் கோரப்பட்டு, ஆகக்குறைந்த விலையை சமர்ப்பித்த நிறுவனம் இதற்காக தெரிவு செய்யப்பட்டதுடன், அதற்காக தகவல் தொழில்நுட்ப ஆலோசகரின் பரிந்துரையும் கிடைக்கப் பெற்றது.

மேற்படி கம்பெனி உரிய பணி தொடர்பான அனுபவத்தைக் கொண்ட நிறுவனமல்ல எனவும், அப்போதைய பணிப்பாளரின் மனைவிக்குச் சொந்தமான கம்பெனி எனவும் பின்னர் கணக்காய்வு ஐயவினாக்களின்போது தெரிய வந்துள்ளமையை குழு அவதானித்தது.

ஸ்கேன் செய்யப்பட்ட தரவுகளை அடிப்படை மூலமாக (Primary Source) பயன்படுத்த முடியாது எனவும், அவற்றை இரண்டாம் நிலை ஆவணமாக (Secondary Document) மாத்திரமே பயன்படுத்த முடியுமெனவும், தகவலறியும் சட்டத்திற்கு அமைவாக உரிய வகையில் தரவுகள் சேகரிக்கப்பட வேண்டுமெனவும் Scanning மற்றும் Uploading செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிகளை அழிப்பது தொடர்பாகவும் சட்டமா அதிபரால் ஆலோசனை வழங்கப்பட்டது. பொறுப்பு வாய்ந்த இது போன்ற பணிகளை அனுபவமற்ற கம்பெனியிடம் கையளிப்பது பாரதூரமான குற்றம் என்பதால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் செயன்முறைகளிலும் குறைபாடுகள் இருப்பதை குழு அவதானித்தது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முறையான ஒழுக்காற்று விசாரணையின் மூலம் இதற்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலருக்கு தண்டனையாக மூன்று சம்பளவேற்றங்கள் வழங்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டன.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

I. முறையான ஒழுக்காற்று விசாரணை அறிக்கையை குழுவிடம் சமர்ப்பித்தல்

குழுவிடம் சமர்ப்பித்தல்

**II.** முறையான ஒழுக்காற்று விசாரணைக்குழுவால் வழங்கப்பட்ட தண்டனை போதுமானதா என்பதை மீண்டும் கவனத்திற்கொண்டு உரியநடவடிக்கைகளை மேற்கொள்ளல்

III. அடிப்படை விசாரணைக் குழு, முறையான ஒழுக்காற்று விசாரணைக் குழு மற்றும் நிதி ஒழுங்குவிதி 104(1)கீழ் விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொறுப்புவாய்ந்த, அறிவு மற்றும் அனுபவமுடைய அலுவலர்களை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் விசாரணை அறிக்கைக்கு அமைவாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை மற்றும் இழைத்துள்ள குற்றம் தொடர்பாக கவனத்திற் கொள்ளல்.

இது தொடர்பான அறிக்கையொன்றை குழுவுக்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் ஒரு மாதத்திற்குள் சமர்ப்பித்தல்.

**<u>பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் – சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

*பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் 242*

**குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் நிலவும் முன்னேற்றம்**

பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் நிலவும் முன்னேற்றம் தொடர்பாக 2025.06.30ஆந் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

## 20. நரம்பியல் சத்திரசிகிச்சை அலகுக்காக ரூபா 4.12 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட சத்திரசிகிச்சைப் பொருட்களில் 80 சதவீதமானவை பயன்படுத்தப்படாமல் காலாவதியானமை

நரம்பியல் சத்திரசிகிச்சை அலகுக்கு ரூபா 4.12 மில்லியன் செலவு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட சத்திரசிகிச்சைப் பொருட்களில் 80 சதவீதமானவை பயன்படுத்தப்படாமல் காலாவதியாவதற்கு பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமை தொடர்பான அறிக்கையொன்றை இரண்டு வாரத்திற்குள் குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு பரிந்துரைத்தது.

அதற்கமைவாக பிரதான கணக்கீட்டு அலுவலரால் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள் அடங்கிய அறிக்கைகக்கு அமைவாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை தொடர்பாக வைத்தியசாலையின் நிர்வாகம் உட்பட அதனுடன் தொடர்புடைய அனைத்து அலுவலர்களும் கூட்டுப்பொறுப்புடன் செயற்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், நிதி ஒழுங்குவிதி 104(1)இற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பாக அலுவலர்கள் நேரடியாக பொறுப்புக் கூற வேண்டியதில்லை என குறிப்பிடப்பட்டுள்ளதை குழு அவதானித்தது.

<u>குழுவின் பரிந்துரை</u>

I. **பிரதான கணக்கீட்டு அலுவலரால் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரை உள்ளடங்கிய அறிக்கைக்கு அமைவாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை தொடர்பாக வைத்தியசாலையின் நிர்வாகம் உட்பட அதனுடன் தொடர்புடைய அனைத்து அலுவலர்களும் கூட்டாகப் பொறுப்புக் கூற வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதும் நிதி ஒழுங்குவிதி 104 (1) இற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைக்கு அமைவாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பாக அலுவலர்கள் நேரடியாக பொறுப்புக் கூற வேண்டியதில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளதன் ஊடாக ஏற்படும் முரண்பாடு தொடர்பாக தேடிப்பார்த்து அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு ஒரு மாதத்திற்குள் குழுவிற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் அறிக்கையிடல்.**

<u>பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக் கூற வேண்டிய / நிறுவனங்கள்</u>

செயலாளர் – சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

<u>குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் நிலவும் முன்னேற்றம்</u>

பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் நிலவும் முன்னேற்றம் தொடர்பாக 2025.06.30ஆந் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

**21. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்திய சாலையில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளும் 04 விடுதி அறைகளை விசேட விடுதி அறைகளாக (Family room) நவீனமயப்படுத்தும் பணியும் உள்டங்கலாக 50 அறைகளை நவீனமயப்படுத்தல்.**

(i) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்திய சாலை சபையின் 50 அறைகள் கருத்திட்டத்திற்காக 32 அங்குல அளவிலான தொலைக்காட்சிப் பெட்டிகள் 25இனை கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும், அதற்கு இயைபுறாமல் ரூ.2,636,100 (பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக) 43அங்குல அளவிலான 25 தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டன. இம்மாற்றம் யாரால் மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பாக அலுவலர்கள் அறிந்திருக்கவில்லை என குழு தெரிவித்தது.

Wall Brackets இல்லாமையால் தொலைக்காட்சிப் பெட்டிகளை பொறுத்துவது தாமதமானதாக தெரிவிக்கப்பட்ட போதும், பின்னர் அவை பொதி செய்யும் பெட்டிகளில் இருந்ததாக தெரிய வந்தது. 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆந் திகதியளவில் 10 தொலைக்காட்சிப் பெட்டிகள் பயன்படுத்தப்படவில்லை என்பதை குழு அவதானித்தது.

(ii) இக்கருத்திட்டத்துடன் தொடர்புடையதாக (18000 BTU Non Inverter) 18 குளிரூட்டிகளை ரூ. 4,560,228 இற்கு கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தபோதும், பெறுகைக் குழுவின் தலைவர் மற்றும் பிரதிநிதிகள் இருவரின் அங்கீகாரத்திற்கு அமைவாக கொள்வனவு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு பின்னர் பெறுகைக் குழுவின் தழுவல் அங்கீகாரத்திற்கு அமைவாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக

முற்பண பிணைமுறியின் அடிப்படையில் ஒப்பந்தத் தொகையில் 30% ஆன ரூ. 1,159,380/- கொடுப்பனவு செலுத்தப்பட்டது. 2024ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13ஆந் திகதி 18 இயந்திரங்கள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் 2025 ஏப்பிறல் மாதம் 30ஆந் திகதியளவில் அதில் 05 இயந்திரங்கள் மாத்திரம் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 13 இயந்திரங்களை மீண்டும் வழங்குனருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இக்கருத்திட்டம் தொடர்பாக சிக்கலான நிலை காணப்படுவதாகவும், அறைகளை நவீனமயப்படுத்த முன்னர் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், அமைச்சரவை பரிந்துரையையும் துணையாகக் கொண்டு ரூ. 50 மில்லியன் வரை அந்நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யக் கூடிய வழிமுறையையும் பயன்படுத்திக் கொண்டு, உரிய பணிப்பாளர் அங்கீகாரமின்றி முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்துடன் மாத்திரம் இக்கொள்வனவு இடம்பெற்றுள்ளதாகவும் குழு அவதானித்தது.

**<u>குழுவின் பரிந்துரை</u>**

I. தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்வனவு செய்வதற்குரிய பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பிடலுடன் தொடர்புடைய சகல அறிக்கைகளையும் குழுவிடம் சமர்ப்பித்தல்

II. சகல தொலைக்காட்சிப் பெட்டிகளை பொறுத்தி பயன்பாட்டுக்கு எடுத்தல் மற்றும் அது தொடர்பாக கள ஆய்வை மேற்கொண்டு குழுவுக்கும், கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் ஒரு வாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பித்தல்.

**<u>பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக் கூற வேண்டிய / நிறுவனங்கள்</u>**

தவிசாளர் – ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை

**<u>குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் நிலவும் முன்னேற்றம்</u>**

பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் நிலவும் முன்னேற்றம் தொடர்பாக 2025.06.30ஆந் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.

## 22. <u>2024ஆம் ஆண்டு தேர்தல் காலத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபைக்கான ஆட்சேர்ப்புகள் உரிய நடைமுறைக்கு அப்பாற்பட்டு இடம்பெற்றுள்ளமை</u>

2024ஆம் ஆண்டு தேர்தல் காலப்பகுதியில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு அப்பாற்பட்டு 48 முகாமைத்துவ உதவியாளர்களும், 6 சாரதிகளும், 95 சுகாதார உதவியாளர்களும் ஆட்சேர்க்கப்பட்டு 2024ஆம் ஆண்டு யூலை மாதம் தொடக்கம் 2025 ஏப்பிறல் மாதம் 30ஆந் திகதி வரை சம்பளம் மற்றும் படிகளுக்கு ரூ. 96,305,351 செலுத்தப்பட்டது.

உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாக சாதாரண நேர்முகப் பரீட்சையும், செயன்முறைப் பரீட்சையும் நடத்தபட்டு அவ்விரண்டு பரீட்சையிலும் சித்திபெறுவோரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றபோதும், இதன்போது செயன்முறைப் பரீட்சை மேற்கொள்ளப்படவில்லை எனவும், பின்னர் நடத்தப்பட்ட

தொழில்முறைசார் பரீட்சை, மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவரை நியமனஞ் செய்யாமல் நடத்தப்பட்டது என்பதையும் குழு அவதானித்தது.

சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், சாரதிகளுக்கான தொழில்சார் பரீட்சையை நடத்துவதற்கு கோரப்பட்டதாகவும், இதில் சித்தியடையும் வரையில் சம்பளம் நிறுத்தி வைக்கப்பட்டதாகவும், தேர்தல் காலமென்பதால் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களிடமிருந்து தேவையான ஒத்துழைப்பு கிடைக்கவில்லையெனவும், இதற்கு பதிலாக, போக்குவரத்துப் பிரிவின் தலைமை உத்தியோகத்தர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவொன்றின் உதவியுடன் பரீட்சை நடத்தப்பட்டதாகவும், இந்த ஏற்பாடுகள் முன்னாள் தவிசாளரின் வாய்மூல உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்டதாகவும், வைத்தியசாலை பணிப்பாளர் இந்த விடயத்தில் சம்பந்தப்படவில்லையெனவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் நிர்வாகச் சபை உத்தியோகத்தர் தெளிவுபடுத்தினார்.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

I. மேற்கூறப்பட்ட முழுமையான செயன்முறை தொடர்பில் ஓழுங்கான விசாரணையொன்றை நடத்தி பொறுப்பான சகல உத்தியோகத்தர்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை 01 மாத காலத்துக்குள் குழுவிற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் சமர்ப்பித்தல்.

**விதப்புரையை நடைமுறைப்படுத்த வேண்டிய/பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள்/நிறுவனங்கள்**

செயலாளர் – சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

**குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் முன்னேற்றம்**

விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் முன்னேற்றம் 2025.06.30 ஆம் திகதி வரையில் குழுவிற்கு அறிவிக்கப்படவில்லை.

## 23.சீர்ப்படுத்தத்தக்க நோயாளர் கட்டில்களை கொள்வனவு செய்தல் (Procurement of Adjustable Patient Beds):

அறைகளுக்கான சீர்ப்படுத்தத்தக்க 50 நோயாளர் கட்டில்கள் மற்றும் மெத்தைகளை (Adjustable Patient beds with mattresses) கொள்வனவு செய்வதற்கு தளபாடங்கள் மற்றும் பிற உபகரணங்களின் கீழ் விலை மனு கோரப்பட்டிருந்த போதிலும், விபரக்குறிப்புகளுடன் இணங்காமையினால் 2024 ஆகஸ்ட் 28 ஆம் திகதி மீண்டும் விலை மனுக்கள் கோரப்பட்டதுடன், வழங்கப்பட்ட மாதிரியை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு 2024 செப்டெம்பர் 05 ஆம் திகதி பரிசோதித்ததாகவும், இது குறித்த விபரக்குறிப்புகளுடன் இணங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், இந்த நோயாளர் கட்டில்கள் (Adjustable Patient Beds) உயிரியல் மருத்துவ உபகரணமாகக் காணப்படுவதுடன், வைத்தியசாலையின் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் ஒருவர் கடமையில் இருக்கின்ற வேளையில் இதுபோன்ற உபகரணம் தொடர்பில் விடய

அறிவுள்ள உத்தியோகத்தர் ஒருவர் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லையெனவும் இதனால் தயாரிக்கப்பட்ட விபரக்குறிப்புகளின் சரியான தன்மை மற்றும் உபகரணங்களின் தரம் என்பன குறித்து கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லையென்பதை குழு அவதானித்தது.

மேற்படி நோயாளர் கட்டில்கள் உயிரியல் மருத்துவ உபகரணமாக கருதப்படுவதால், இவ்வாறான உபகரணங்கள் பற்றிய விடய அறிவுள்ள உத்தியோகத்தர்களை தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு நியமிக்காமை பிரச்சினைக்குரிய விடயமாகுமெனவும், இதுபோன்ற கொள்வனவு செயற்பாடுகளில் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் ஒருவர் சம்பந்தப்பட வேண்டுமெனவும், இக்கட்டில்களை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் (NMRA) பதிவு செய்யப்பட வேண்டிய தேவை காணப்படுவதாகவும், சில நேரங்களில் பதிவுகளை வழங்குவதில் தாமதங்கள் ஏற்படுவதாகவும் குழு அவதானித்தது.

## 24.மெரொபெனெம் (Meropenem) மருந்தை உள்நாட்டில் கொள்வனவு செய்வதில் காணப்படும் பிரச்சினைகள் (Issues regarding Local Purchase of Meropenem Drug)

2014 நவம்பர் 28 ஆம் திகதியன்று, உடலியல் நோய் தொடர்பான மருத்துவ நிபுணர், மெரோபெனெம் (Meropenem) மருந்தின் இரண்டு குறிப்பிட்ட வர்த்தக நாமங்களுக்கு, மருத்துவமனையில் உள்ள அசல் வர்த்தக நாமத்தை (original brand) விட விலை குறைவு

மற்றும் நோயாளிகள் விரைவாகக் குணமடைதல் ஆகிய காரணங்களைக் குறிப்பிட்டு, அந்த மருந்துகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்து அதன் அடிப்படையில் மருந்துகளை வழங்கியுள்ளார் எனவும், இதே மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவ நிபுணர் குழு ஒன்றினால், குறிப்பிட்ட அந்த இரண்டு மருந்துகளுக்கும் இடையிலான பக்டீரியா தடுப்புத் தன்மையில் (inhibition) குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை என்பது in-vitro studies மூலம் கண்டறியப்பட்டுள்ளது எனவும் குழுவினால் அவதானிக்கப்பட்டது.

மருத்துவமனையில் மெரோபெனெம் மருந்து கையிருப்பில் இருந்தபோதிலும், 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் நவம்பர் 28 ஆம் திகதி வரையான 11 மாத காலப்பகுதியில், சுமார் 40 மில்லியன் ரூபா செலவில் அந்த மருந்து உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த உள்நாட்டு கொள்வனவுகளில் (823 மில்லியன்) கிட்டத்தட்ட 50% ஆகும் என்றும் குழுவில் வெளியானது.

இக்காலப்பகுதியில் வைத்தியசாலையில் மெரொபெனெம் என்ற மருந்து இருந்ததா என குழு வினவியதுடன், மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து (MSD) கிடைக்காத சந்தர்ப்பங்களில் தேவைக்கேற்ப உள்நாட்டில் கொள்வனவு செய்யப்படுவதாகவும், மருத்துவ வழங்கல் பிரிவில் போதுமான கையிருப்பு காணப்பட்ட எல்லா சந்தர்ப்பத்திலும் வைத்தியசாலையில் மருந்துகள் காணப்பட்டதாகவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபையின் பிரதம மருந்தாளர் கருத்துத் தெரிவித்தார்.

மருந்து வகையொன்று கையிருப்பில் உள்ளபோது உள்நாட்டில் கொள்வனவு செய்ய முடியாதென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சபைக்கு அறிவித்தார்.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

I. பிணியாய்வு ரீதியான மதிப்பீட்டை தொடர்ந்து மேற்படி மருந்தை கொள்வனவு செய்தல்.

**I.** இச்செயற்பாடுகள் தொடர்பில் முறையான விசாரணையொன்றை நடத்தி இவ்வாறான நிலைமைகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளல்.

**II. <u>விதப்புரையை நடைமுறைப்படுத்த வேண்டிய/ பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள்/நிறுவனங்கள்</u>**

தலைவர் – ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை நிர்வாகச் சபை

**<u>குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் முன்னேற்றம்</u>**

விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் முன்னேற்றம் 2025.06.30 ஆம் திகதி வரையில் குழுவிற்கு அறிவிக்கப்படவில்லை.

## <u>25. தடுப்பூசி மருந்து ஒவ்வாமை தொடர்பாக பத்திரிகையில் பிரசுரமான அறிக்கை</u>

ஏற்றப்பட்ட தடுப்பூசி மருந்தின் ஒவ்வாமையினால் நோயாளி ஒருவர் மயக்க நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் இரண்டு நாட்கள் சிகிச்சை பெற்றதாகவும், இந்நோயாளிக்கு இதற்கு முன்னர் ஒவ்வாமை

ஏற்பட்டுள்ளமை குறித்து மருத்துவரிடம் அறிவிக்கப்பட்டதாகவும், இச்சம்பவத்தின் பின்னர் தொலைபேசியின் ஊடாக முறைப்பாடு செய்த போதிலும் அதற்கு வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்களை குறிப்பிட்டு பிரசுரமான பத்திரிகைச் செய்தி மீது குழு கவனம் செலுத்தியது.

சம்பவம் நிகழ்ந்து இரண்டு வாரங்களின் பின்னர் ஊடகங்கள் இது பற்றி செய்தி வெளியிட்டதுடன், தானும் ஊடகவியலாளரொருவர் வாயிலாக இது குறித்து அறிந்துகொண்டதாகவும், இவ்விடயம் தொடர்பாக கிடைத்துள்ள எழுத்துமூல முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை குழுவொன்றினால் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், விசாரணைகள் தாமதமாகுதல் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதாகவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை பணிப்பாளர் கருத்து தெரிவித்தார் .

சோதனை மருந்தளவு வழங்கப்பட்டதையடுத்து முதன்மை மருந்தளவை வழங்கிய மருத்துவர் 20 நிமிடங்கள் வரை நோயாளியின் அருகில் இருந்த பின்னர் அங்கிருந்து சென்றதையடுத்து குறுகிய நேரத்தில் நோயாளியின் உடல்நிலை மோசமானதாக இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. 5 நிமிடங்களுக்குள் நிபுணத்துவ மருத்துவர் அவ்விடத்திற்கு வருகை தந்துள்ளதுடன், நோயாளியின் ஆவணங்களில் ஒவ்வாமை ஏற்படலாமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஒவ்வாமையின் தீவிரதன்மை தெளிவாக குறிப்பிடப்படாமை காரணமாக எழுத்துமூல விளக்கமொன்றை பெற்றுக்கொள்வதற்கு விசாரணைக் குழு

தீர்மானித்ததாகவும், அவ்வறிக்கை 2025 மே மாதம் 16ஆம் திகதி கிடைக்கவுள்ளதாகவும் குழுவில் வெளியானது.

வைத்தியசாலையில் முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்கான குழுவொன்று 2024 ஒக்டோபர் 01ஆம் திகதி நிறுவப்பட்டதாகவும், இதற்கு முன்னர் அவ்வாறான ஒரு குழு இருக்கவில்லையெனவும், சம்பவங்களை அறிக்கையிடுவதற்கு "சம்பவ அறிக்கை பத்திரங்கள்" முறையொன்று பயன்பாட்டிலிருந்த போதிலும், மேற்படி சம்பவம் இவ்வாறான அறிக்கை பத்திரத்தின் ஊடாக அறிவிக்கப்படாமை பிரச்சினைக்குரிய விடயமாகுமெனவும், பொது வைத்தியசாலை நிர்வாகச் சபையின் தலைவர் தெரிவித்தார்.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

I. **முறைபாட்டு விசாரணைக் குழுவின் நடவடிக்கைகளை துரிதப்படுத்தல் மற்றும் பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்தவுடன் உரிய விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் விசாரணை நிறைவு செய்யப்பட்டு தீர்மானம் வழங்கப்படும் திகதி பற்றியும் எழுத்து மூலம் அவர்களுக்கு அறிவித்தல்.**

II. **வைத்தியசாலையின் நன்மதிப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பொது மக்களின் முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தொடர்ச்சியான கண்காணிப்பிற்கு உட்படுத்துதல் மற்றும் அது தொடர்பான அறிக்கைகளைப் பேணுதல்.**

III. **வைத்தியசாலையின் நன்மதிப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பொது மக்களின் முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அடிக்கடி கண்காணிப்புச் செய்வதும், அது பற்றிய அறிக்கைகளை பேணிவருவதும்.**

IV. **வைத்தியசாலையின் நன்மதிப்புக்கு பாதகமாக அமையும் ஊடக அறிக்கையிடலை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.**

**விதப்புரைகளை அமுல்படுத்த வேண்டிய / பொறுப்புவாய்ந்த அலுவலர்கள்/ நிறுவனங்கள்**

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலைச் சபை

**குழு விதப்புரைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம்**

குழு விதப்புரைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம் 2025.06.30 ஆம் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 26. தொழில்சார் கட்டணங்கள் மற்றும் வைத்தியசாலை வருமானம் (Professional Fees and Hospital Revenue)

2023 ஆண்டில் ஒட்டுமொத்த பணியாட்டொகுதியினருக்கும் செலுத்தப்பட்ட தொழில்சார் கட்டணங்கள் ரூ.மி. 601.74 ஆகும் என்பதுடன், இதில் வைத்தியசாலை பெற்றுள்ள சேவைக் கட்டணம் ரூ.மி. 0.95 மாத்திரமாகும் என்பது பற்றி குழு கவனம் செலுத்தியது.

வைத்தியசாலை வளங்களைப் பயன்படுத்தி ஆற்றப்படுகின்ற சேவைகளுக்கு வைத்தியசாலை 0.15% ஆன பங்கினை சம்பிரதாயபூர்வமாக அறவிட்டுக் கொள்கின்றது என்றும், அதற்கென

திட்டவட்டமானதொரு அடிப்படையோ அல்லது ஆவணமயப்படுத்தலோ இல்லை என்பதையும் குழு அவதானித்தது.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

**I. இவ்வனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் திட்டவட்டமான முறையான முறையியலொன்றினைத் தயாரித்தல் மற்றும் மேற்படி முறையியல் பற்றி 02 மாதங்களுக்குள் குழு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு விழிப்புணர்வூட்டுதல்.**

**<u>விதப்புரைகளை அமுல்படுத்த வேண்டிய / பொறுப்புவாய்ந்த அலுவலர்கள்/ நிறுவனங்கள்</u>**

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலைச் சபை

**<u>குழு விதப்புரைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம்</u>**

குழு விதப்புரைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம் 2025.06.30 ஆம் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## <u>27.வைத்தியசாலைக்குள் தனியார் சேவையில் ஈடுபடுதலும் அதற்காக தொழில்சார் கட்டணங்களை அறவிடுதலும்</u>

வைத்தியசாலைக்குள் தனியார் சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் அதற்கான தொழில்சார் கட்டணங்களை அறவிடுவதற்கான முறையான அங்கீகாரம் இன்றி மீளாய்வு ஆண்டில் வைத்தியசாலை பணியாட்டொகுதியில் இல்லாத வெளி மருத்துவர்கள் வைத்தியசாலை வளங்களைப் பயன்படுத்தி சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டு தொழில்சார் கட்டணமாக 2022 ஆண்டில் மொத்தமாக ரூ.மி. 23.78 உம் 2023 ஆண்டில் ரூ.மி. 11.98 உம் நோயாளர்களிடமிருந்து

அறவிடப்பட்டிருந்ததுடன், அதில் வைத்தியசாலைக்கு 0.15 சதவீதமான சேவைக் கட்டணம் மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளது என்பது குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்டது.

வைத்தியசாலை வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கைகளுக்கு சம்பிரதாயபூர்வமாக இந்த அறவீடு மேற்கொள்ளப்படுகின்றது என்றும் இதற்கென திட்டவட்டமானதொரு அடிப்படையோ அல்லது ஆவணமயப்படுத்தலோ இல்லை என்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை சபையின் தலைவர் தெரிவித்தார்.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

**I. இவ்வனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் திட்டவட்டமான முறையான முறையியலொன்றினைத் தயாரித்தல் மற்றும் மேற்படி முறையியல் பற்றி 02 மாதங்களுக்குள் குழு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு விழிப்புணர்வூட்டுதல்.**

<u>**விதப்புரைகளை அமுல்படுத்த வேண்டிய / பொறுப்புவாய்ந்த அலுவலர்கள்/ நிறுவனங்கள்**</u>

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை சபை

<u>**குழு விதப்புரைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம்**</u>

குழு விதப்புரைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம் 2025.06.30 ஆம் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 28.வைத்தியசாலை செலவினங்களை கணிப்பீடு செய்தல் மற்றும் விலையை நிர்ணயிக்கும் முறைமை

வைத்தியசாலைக்கு குறிப்பானதொரு செலவின கணிப்பீட்டு முறையியல் இதற்கு முன்னர் காணப்படவில்லை என்றும், 2025 ஏப்ரல் மாத இறுதியளவில் சகல நோயாளர்களுக்குமான உபசரணை சேவைகளுக்குரிய செலவினங்களை கணிப்பீடு செய்வது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றும், மே மாத இறுதியில் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பித்து விலையை நிர்ணயிக்கும் நடவடிக்கைகளை அங்கீகரித்துக் கொள்ள எதிர்பார்ப்பதாகவும், புதிய முறையியல் மூலம் நோயாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற தொகையை குறிப்பாக ஆவணமயப்படுத்த முடியும் என்பதும் குழுவிற்கு தெரியவந்தது.

## 29.நோயாளர்களின் வைத்தியசாலை கட்டணப் பற்றுச்சீட்டுகள் செலுத்துவதிலிருந்து விடுவித்துள்ளமை

குறித்ததொரு முறையில் /அடிப்படை இன்றி உயர் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்தின் பேரில் ஒரு சில நோயாளர்களின் வைத்தியசாலை கட்டணப் பற்றுச்சீட்டுகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்துவது விலக்களிகப்பட்டுள்ளது எனவும், 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டின் இறுதி வரையில் மொத்தமாக ரூ.மி. 28.82 ஆன பட்டியல்களுக்கு இவ்வாறு விலக்களிக்கப்பட்டுள்ளது எனவும், 2017 ஆண்டில் செலவு அட்டைகள் மூலம் இந்தக் கணக்குகளிலிருந்து மொத்தமாக ரூ.மி. 6.4 ஆன பற்றுச்சீட்டுக்கள் நீக்கப்பட்டமைக்கான காரணங்கள் தொடர்பில் கணக்காய்வுக்கு விளக்கமளிப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக சுகாதார அமைச்சினால் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும் 2014 முதல் 2024 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதையும் குழு அவதானித்தது.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

I. **நோயாளர்களின் வைத்தியசாலை பற்றுச் சீட்டுகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விசாரணை நிறைவடைந்ததன் பின்னர் அதன் அறிக்கையை துரிதமாக குழுவிடமும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமும் சமர்ப்பித்தல்.**

**<u>விதப்புரைகளை அமுல்படுத்த வேண்டிய / பொறுப்புவாய்ந்த அலுவலர்கள்/ நிறுவனங்கள்</u>**

செயலாளர் – சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை சபை

**<u>குழு விதப்புரைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம்</u>**

குழு விதப்புரைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம் 2025.06.30 ஆம் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 30.வைத்தியசாலைக் கட்டணப் பற்றுச்சீட்டுக்களை செலுத்தாது வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ள நோயாளர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ள வேண்டிய தொகைகளை அறவிடுதல்

வைத்தியசாலைக் கட்டணப் பற்றுச்சீட்டுக்களை செலுத்தாது வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய நோயாளர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ள வேண்டிய பற்றுச் சீட்டுக்களின் கூட்டுத்தொகையாக ரூ.மி. 23.07 ஆன கடன்பட்டோர் மீதி காணப்பட்டதுடன், மேற்படி பற்றுச் சீட்டுக்களின் பெறுமதி ரூ. 360 தொடக்கம் ரூ.மி. 2.04 இற்கு இடைப்பட்டதாகக் காணப்பட்டது. நோயாளர்கள் வைத்தியசாலையிலிருந்து வெளியேறும் போது வைத்தியசாலைக் கட்டணங்கள் அறவிடப்படாமைக்கான காரணங்கள் கணக்காய்வுக்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

இக்கட்டணங்களை அறவிட்டுக் கொள்வதற்காக தகவல்கள் சேகரிக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை குழு அவதானித்தது.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

**I. இது தொடர்பில் ஆராய்ந்து மேற்படி அறவிடப்பட வேண்டிய நிதியை அறவிட்டுக் கொள்வதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்வதும், அது பற்றி குழுவையும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியையும் விழிப்புணர்வூட்டுதல்.**

**<u>விதப்புரைகளை அமுல்படுத்த வேண்டிய / பொறுப்புவாய்ந்த அலுவலர்கள்/ நிறுவனங்கள்</u>**

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை சபை

<u>குழு விதப்புரைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம்</u>

குழு விதப்புரைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம் 2025.06.30 ஆம் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## <u>31.இலவச சிகிச்சையளித்தல் கொள்கை (Free Treatment Policy)</u>

வைத்தியசாலை ஊழியர்களுக்கும், அவர்களில் தங்கிவாழ்வோருக்கும், இலங்கையிலுள்ள சமயத் தலைவர்கள் மற்றும் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கும் (ரூபா 40,000 எனும் வரையறைக்கு உட்பட்டு) இலவசமாக சிகிச்சையளிப்பது சம்பிரதாயபூர்வமாக இடம்பெற்று வருகின்றது என்றும், முறையான முறையியலின் கீழ் இது இடம்பெறுவதில்லை என்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை சபைத் தலைவர் விளக்கமளித்தார்.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

**I. மேற்படி சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கென பிரிதான கொள்கையையும், முறையியலையும் தயார் செய்து ஆவணமயப்படுத்துவதற்கு துரிதமாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அது பற்றி குழுவையும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியையும் விழிப்புணர்வூட்டுதல்.**

<u>விதப்புரைகளை அமுல்படுத்த வேண்டிய / பொறுப்புவாய்ந்த அலுவலர்கள்/ நிறுவனங்கள்</u>

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை சபை

<u>குழு விதப்புரைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம்</u>

குழு விதப்புரைகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம் 2025.06.30 ஆம் திகதி வரை குழுவுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## <u>32.ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை சபையின் மருந்தகம்</u>

மருந்தகத்தை (Pharmacy) ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை சபையின் கீழ் கொண்டுவருவதற்கும், வெற்றிகரமாக இயங்கச் செய்வதற்குமாக 2023 யூலை மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய இரண்டாவது உப குழுவினால் கணக்கீட்டு அலுவலருக்கு விதப்புரை வழங்கப்பட்டிருந்தது.

மருந்துகளை கொள்வனவு செய்வதை மருத்துவ வழங்கல் பிரிவு ஊடாக மேற்கொண்டு மீண்டும் மருந்தகம் மூலம் விற்பனை செய்ய வேண்டி ஏற்படுவதனால், மருந்தகத்தை வைத்தியசாலைச் சபையின் கீழ் கொண்டுவருவதனூடாக நோயாளர்களுக்கு மருந்துகளை குறைந்த விலையில் கொள்வனவு செய்யும் இயலுமை கிடைக்காதென்பதனை குழு அவதானிப்புச் செய்தது.

*பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் 242*